# குழந்தைகள் அறிவு

டால்ஸ்டாய்

அன்னை நிலயம்

ராயவரம்

விற்பனை உரிமை:

தமிழ் நிலையம்

புத்தகம் வெளியிடுவோர்:

புதுக்கோட்டை

# குழந்தைகள் அறிவு

மூல ஆசிரியர்:

லியோ டால்ஸ்டாய்

மொழிபெயர்த்தவர்: தி. ஜ. ர.

அன்னை நிலையம்

இராயவரம் :: புதுக்கோட்டை ஸ்டேட்

முதற் பதிப்பு ஜூலை 1946
உரிமை பதிவு செய்யப்பெற்றது

விலை ரூ. 1—4—0

அச்சிட்டோர்
பாப்பா பிரஸ், ராயவரம்

# முன்னுரை

இந்தச் சின்னஞ் சிறு சித்திரங்கள், டால்ஸ்டாய் தமது அந்திய காலத்தில் செய்த புதுமையான இலக்கிய பரீட்சையாகும். வாழ்க்கையின் சிக்கலான பெரிய பிரச்னைகள், பெரிய விஷயங்கள் என்று பண்டிதர்கள் மிரட்டக்கூடிய பொருள்களையெல்லாம் குழந்தைகளின் பார்வையிலே அவர் சித்திரித்துக் காட்டுகிறார். அவற்றிலே தான் என்ன அபரிமிதமான ஞானமும் இலக்கியச் சுவையும் நிரம்பி யிருக்கின்றன! இந்த மொழி பெயர்ப்பை அவ்வப்போது செய்து 'சக்தி' யில் வெளியிட என்னைத் தூண்டிய பெருமை அதன் உரிமையாளர் ஸ்ரீ வை. கோவிந்தனைச் சேரும். அதற்காகவும், இதனைப் புத்தக உருவில் வெளியிட அனுமதித்ததற்காகவும் அவர்களுக்கு எனது நன்றி உரியதாகும்.

தி. ஜ. ர.

# பொருள் அடக்கம்


1. மதம் ... 1
2. யுத்தம் ... 4
3. தாய்நாடு : ராஜாங்கம் ... 7
4. வரிகள் ... 10
5. தூஷணை ... 13
6. அன்பு ... 15
7. மது பானம் ... 18
8. மரண தண்டனை ... 23
9. சிறைச்சாலை ... 29
10. செல்வம் ... 35
11. தீமைக்கு நன்மை ... 41
12. பத்திரிகைகள் ... 44
13. பச்சாதாபம் ... 49
14. கலை ... 53
15. சயின்ஸ் ... 59
16. வழக்காடுதல் ... 64
17. குற்றச் சட்டம் ... 68
18. சொத்துரிமை ... 70
19. குழந்தைகள் ... 74
20. படிப்பு ... 80

# 1. மதம்

ஒரு பையனும் அவன் தாயும்.

பையன்: தாதி ஏன் நல்ல உடுப்பு அணிந்திருக்கிறாள்? எனக்கு ஏன் இந்தப் புதுச் சொக்காயைப் போட்டிருக்கிறாள்?

தாய்: ஏனென்றால், இன்று திருநாள். நாம் தேவாலயத்துக்குப் போகப் போகிறோம்.

பையன்: இன்று என்ன திருநாள்?

தாய்: ஆரோகணத் திருநாள்.

பையன்: 'ஆரோகணம்' என்றால் என்ன அர்த்தம்?

தாய்: நம்முடைய கிருஸ்து பெருமான், பரமண்டலத்துக்கு ஆரோகணம் செய்தார் என்று அர்த்தம்.

பையன்: 'ஆரோகணம்' செய்தார் என்றால் என்ன அர்த்தம்?

தாய்: 'மேலே போனார்' என்று அர்த்தம்.

பையன்: அவர் எப்படிப் போனார்? இறக்கை கட்டிப் பறந்தாரா?

தாய்: இறக்கையுமில்லை, ஒன்றுமில்லை. இருந்தபடியே மேலே போய்விட்டார். ஏனென்றால், அவர் கடவுள். கடவுள் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும்.

பையன்: ஆனால், அவர் எங்கே போனார்? வானம் என்பது ஒரே சூன்ய வெளி என்று அப்பா சொன்னாரே! அங்கே நட்சத்திரங்கள்தான் இருக்கின்றன; நட்சத்திரங்களுக்கும் அப்பால் நட்சத்திரங்களே இருக்கின்றன; வானத்துக்கு எல்லையே கிடையாது —இப்படியெல்லாம் அப்பா சொன்னாரே! அப்படியானால், நம்முடைய கிருஸ்து பெருமான் எங்கே போனார்?

தாய்: (புன் சிரிப்புடன்) எல்லா விஷயத்தையும் நாம் தெரிந்து கொண்டு விட முடியாது. நமக்கு நம்பிக்கை வேண்டும்.

பையன்: நம்பிக்கை எதில்?

தாய்: பெரியவர்கள் சொல்லுவதில் நம்பிக்கை.

பையன்: அப்படியானால், உப்புக் கொட்டிப் போயிற்றே; அதனால் யாரோ செத்துப் போகப் போகிறார்கள் என்று நான் சொன்னேன். மூடத்தனமான கொள்கைகளையெல்லாம் நம்பாதே என்று நீதானே சொன்னாய்?

தாய்: ரொம்ப சரி; மூடத்தனமான எதையும் நீ நம்பக் கூடாதுதான்.

பையன்: அப்படியானால், 'எது மூடத்தனம், எது மூடத்தனம் இல்லை' என்று எனக்கு எப்படித் தெரியும்?

**தாய்:** உண்மையான மதக் கொள்கையை நீ நம்ப வேண்டும்.

**பையன்:** எது உண்மையான மதம்?

**தாய்:** நமது மதம். (தனக்குள்) என்ன அபத்தம் நான் பேசுவது! இது எனக்கே தெரிகிறது. (வெளிப்பட) அப்பாவிடம் போய், நாங்கள் புறப்பட்டாயிற்று என்று சொல்லு. உன் கழுத்துப் பட்டையைச் சுற்றிக் கொள்.

**பையன்:** ஏன் அம்மா! பிரார்த்தனை முடிந்ததும், நமக்குச் சாக்கலேட் கொடுப்பார்கள் இல்லையா?

# 2. யுத்தம்

கார்ல்சன் ஷிமிட்: 9 வயது.
பேட்யா அர்லோவ்: 10 வயது.
மாஷா அர்லோவா: 8 வயது.

கார்ல்: ருஷ்யர்கள் நம் நிலத்தைப் பிடுங்க வருவார்கள். நமது பிரஷ்யா அதற்கு விடாது!

பேட்யா: ஆனால், நிலம் நம்முடையது. நாம் தானே முதலில் அதைப் பிடித்தோம்?

மாஷா: 'நாம்' என்றால் யார்?

பேட்யா: நீ ஒரு பாப்பா. இதெல்லாம் உனக்குத் தெரியாது. 'நாம்' என்றால், நம் நாட்டு ஜனங்கள்தான்.

கார்ல்: எல்லா ஊரிலுமே இப்படித் தான். சிலர் ஒரு நாட்டுக்குச் சொந்தம்; சிலர் மற்றொரு நாட்டுக்குச் சொந்தம்.

மாஷா: நான் எந்த நாட்டுக்குச் சொந்தம்?

பேட்யா: ருஷ்யாவுக்குத் தான். நாம் எல்லோருமே ருஷ்யாவுக்குச் சொந்தம்.

மாஷா: எனக்கு அதில் இஷ்டமில்லை யென்றால்?

பெட்யா: உனக்கு இஷ்ட மிருந்தாலும் சரி தான்; இல்லா விட்டாலும் சரி தான் — நீ ருஷ்யாவுக்கே சொந்தம். ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு ஜார் அல்லது ஒரு ராஜா உண்டு.

கார்ல்: அல்லது ஒரு பார்லிமெண்ட் இருக்கும்....

பெட்யா: ஒவ்வொன்றுக்கும் சொந்தமான சேனை உண்டு; ஒவ்வொன்றிலும் ஜனங்களிடம் வரி வசூலிக்கிறார்கள்.

மாஷா: பின், ஏன் அவைகள் பிரிந்திருக்கின்றன?

பெட்யா: உனக்கென்ன தெரியும்? ஒவ்வொரு நாடும் வெவ்வேறு தினுசு.

மாஷா: ஏன் அவைகள் அப்படிப் பிரிந்திருக்கின்றன?

கார்ல்: ஒவ்வொரு மனிதனும் தன் தன் தாய் நாட்டை நேசிப்பதால் தான்.

மாஷா: அவைகள் ஏன் பிரிந்திருக்கின்றன என்று எனக்குப் புரியவே யில்லை. எல்லா நாட்டாரும் ஒன்றாய்ச் சேர்ந்திருந்தால் நன்றாயிராதா?

பெட்யா: விளையாடுவதற்கு எல்லாரும் ஒன்றாய்ச் சேரலாம்; அது நன்றாயு மிருக்கும். ஆனால், இது விளையாட்டல்ல; ரொம்பவும் பெரிய விஷயம்.

மாஷா: *எனக்கொன்றும் புரியவில்லை.*

கார்ல்: *நீ பெரியவளாய் வளரும்போது, உனக்குப் புரிந்து விடும்.*

மாஷா: *அப்படியானல், நான் பெரியவளாய் வளரவே மாட்டேன்.*

பெட்யா: *நீ 'துளியூண்டுக்' குழந்தை. இருந்தும், எல்லாரையும் போலவே, உனக்கும் இதற்குள்ளே பிடிவாதம் மாத்திரம் வந்துவிட்டதே!*

# 3. தாய்நாடு : ராஜாங்கம்

காவ்ரிலா : ஒரு வீட்டு வேலையாள்; ருஷ்ய சர்க்காரால் கட்டாயமாக ராணுவத்தில் சேர்க்கப்பட்டிருப்பவன்.

மிஷா : அந்த வேலையாளுடைய எஜமானின் மகன்.

காவ்ரிலா : நல்லது, மிஷங்கா! என் அருமைச் சின்ன எஜமானே! போய் வருகிறேன். கடவுள் மறுபடியும் ஒரு நாள் நாம் சந்திக்கும்படி செய்வாரோ, என்னவோ! நான் அறியேன்.

மிஷா : நீ அசலூர் போகிறாயா?

காவ்ரிலா : ஆமாம். மறுபடியும் யுத்தம் வந்து விட்டது. நான் ரிஸர்வ் படையைச் சேர்ந்தவன்.

மிஷா : யாரோடு யுத்தம்? யாருக்கும் யாருக்கும் சண்டை?

காவ்ரிலா : அதைக் கடவுளே அறிவார். எனக்கு அதெல்லாம் தெரியாது. நான் சண்டையைப் பற்றிப் பத்திரிகைகளில் படித்தேன். அதொன்றும் எனக்குப் புரியவில்லை. நாம் யாருக்கோ சலுகை காட்டியதில், ஆஸ்டிரியா தேசத்தாருக்கு

மனவருத்தமாம். அவர்கள் பெயர் என்னவோ வாம்....

மிஷா: ஆனால், நீ ஏன் போகிறாய்?

காவ்ரிலா: நான் எப்படிப் போகாமலிருக்க முடியும்? ஜாருக்காகவும் தாய் நாட்டுக்காகவும் மதத்துக் காகவுமே யன்றோ சண்டை நடக்கிறது?

மிஷா: ஆனால், போவதிலே உனக்கு இஷ்ட மில்லையே?

காவ்ரிலா: ஆசை மனைவியையும் குழந்தை குட்டி களையும் விட்டுப் போக, யாருக்குத் தான் இஷ்ட மிருக்கும்? இந்த மாதிரி நல்ல இடத்தை விட்டுச் செல்ல, நான் ஏன் விரும்புவேன்?

மிஷா: பின்னே, நீ ஏன் போகிறாய்? 'எனக் குப் போக இஷ்டமில்லை; நான் போக மாட்டேன்' என்று சொல்லி விடேன். அவர்கள் உன்னை என்ன செய்து விடுவார்கள்?

காவ்ரிலா: (நகைக்கிறான்) அவர்கள் என்ன செய் வார்களா! பலாத்காரமாய் என்னை இழுத்துக் கொண்டு போவார்கள்.

மிஷா: ஆனால், உன்னை யார் இழுப்பார்கள்?

காவ்ரிலா: என் மாதிரி மனிதர்களே என்னை இழுப்பார்கள்; அவர்களுக்கு வந்த கட்டளைப்படி இழுப்பார்கள்.

மிஷா: அவர்களும் உன் மாதிரியே மனிதர் களா யிருந்தால், அவர்கள் ஏன் உன்னை இழுக்கச் சம்மதிப்பார்கள்?

காவ்ரிலா : அது படை யதிகாரிகளின் கட்டளை. படை யதிகாரிகள் கட்டளை யிட்டால், எவனையும் இழுத்துக் கொண்டு போகிறார்கள்.

மிஷா : அவர்களும் மறுத்தால்?

காவ்ரிலா : அவர்களால் மறுக்க முடியாது?

மிஷா : ஏன் முடியாது?

காவ்ரிலா : ஏன்? சட்டமில்லையா....? அதுதான் சட்டம்.

மிஷா : அதென்ன சட்டம்?

காவ்ரிலா : நீ என்னவோ விநோதமா யெல்லாம் பேசுகிறாய்! நான் உன்னோடு வெகு நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டேன். பானம் தயாரிக்கப் பானையை அடுப்பிலே போட நாழிகையாகி விட்டது. போகிறேன்.

# 4. வரிகள்

மணியக்காரர்
கிருஷ்கா : ஏழு வயதுச் சிறுமி.

**மணியக்காரர் :** உள்ளே யாரும் இல்லையா ?

**கிருஷ்கா :** பசு மாட்டைத் தேடிக்கொண்டு அம்மா போயிருக்கிறாள். எஜமான் வீட்டுத் தோட்டத்துக்கு அப்பா போயிருக்கிறார்.

**மணிய :** சரிதான்; மணியக்காரர் வந்து விட்டுப் போனார் என்று உன் அம்மாவிடம் சொல். இது மூன்றாந் தடவை. ஞாயிற்றுக் கிழமைக்குள் வரிப் பணத்தைக் கொண்டுவந்து தரா விட்டால், பசு மாட்டைப் பிடித்துக் கொண்டு போய்விடுவேன் என்று அவளிடம் சொல்.

**கிருஷ் :** எங்கள் பசுமாட்டைக் கொண்டுபோய் விடுவீரா? நீர் என்ன திருடனா? நீர் அதைப் பிடிக்க வந்தால், நாங்கள் அதை விடமாட்டோம்.

**மணிய :** (புன்னகையுடன்) நீ எவ்வளவு புத்தி சாலிப் பெண்ணா யிருக்கிறாய்! உன் பெயர் என்ன ?

**கிருஷ் :** கிருஷ்கா.

மணிய: சரி, கிருஷ்கா! நீ நல்ல புத்திசாலிப் பெண். ஆனல், நான் சொல்வதைக் கேள். நான் திருடன் அல்ல; என்ருலும், உங்கள் பசுவைக் கொண்டுபோய் விடுவேன் என்று உன் அம்மா விடம் சொல்.

கிருஷ்: நீர் திருடன் இல்லாவிட்டால், ஏன் எங்கள் பசுவைக் கொண்டு போக வேண்டும்?

மணிய: ஏனென்ருல், சட்டப்படி செலுத்த வேண்டிய வரியைச் செலுத்த வேண்டும். வரிப் பணத்துக்காக, நான் பசுவைப் பிடித்துக்கொண்டு போய் விடுவேன்.

கிருஷ்: வரி யென்ருல் என்ன?

மணிய: என்ன சமர்த்தா யிருக்கிருய்! வரி என்ருல் என்னவா? வரி என்ருல், ஜார் போடும் உத்திரவுப்படி ஜனங்கள் பணம் செலுத்த வேண் டும். அதுதான் வரி.

கிருஷ்: யாருக்கு?

மணிய: ஏன், ஜாருக்குத்தான்! அப்புறம் அந்தப் பணம் எப்படிச் செலவாக வேண்டும் என்று அவர் தீர்மானிப்பார்.

கிருஷ்: ஆனல், ஜார் என்ன ஏழையா? நாம் தான் ஏழைகள்; நம்மிடம் இருந்து அவர் ஏன் வரி கள் வாங்குகிருர்?

மணிய: அட அசட்டுப் பெண்ணே! பணத்தை அவர் தம் சொந்தத்துக்கு எடுத்துக் கொள்ள அல்ல. நமக்காகத்தான், நம்முடைய தேவைக்

காகத்தான், அவருக்குப் பணம் அவசியமா யிருக்கிறது. உத்தியோகஸ்தர்களுக்கும் ராணுவத்துக்கும் கல்விக்கும் செலவழிப்பது நமது நன்மைக்காகவே யல்லவா?

கிருஷ்: எங்கள் பசுவை நீர் பிடித்துக் கொண்டு போனால், எங்களுக்கு என்ன நன்மை? அதனால் எங்களுக்கு ஒரு நன்மையு மில்லை.

மணிய: உனக்கு வயசான பிறகு, அது உனக்குத் தெரியும். நான் சொன்னதை மட்டில் ஞாபகமாய் அம்மாவிடம் தெரிவி.

கிருஷ்: இந்தப் பிதற்றலை யெல்லாம் அம்மாவிடம் நான் சொல்லமாட்டேன். உமக்கும் ஜாருக்கும் ஏதாவது தேவையானல், அதை நீங்களே செய்து கொள்ளுங்கள்; எங்களுக்குத் தேவையானதை நாங்களே செய்து கொள்ளுகிறோம்.

மணிய: ஏ அப்பாடா! இந்தப் பெண் வளர்ந்து பெரியவளாகும்போது, கொடிய விஷப் பாம்பாய்த் தான் இருப்பாள்.

## 5. தூஷணை

| | |
|---|---|
| மிட்யா: | 10 *வயது.* |
| இலியுஷா : | 9 *வயது.* |
| ஸோன்யா : | 6 *வயது.* |

மிட்யா : *நாம் துணியில்லாமலே யிருக்க முடியும் என்று பீட்டரிடம் நான் சொன்னேன். முடியாதென்று அவன் சொன்னான். நமது முகம் குளிரைப் பொறுக்கப் பழகி யிருக்கிறதே ; அந்த மாதிரியே உடம்பு முழுதும் குளிரைப் பொறுக்கும்படி நாம் பழக்கலாம் என்று மைக்கேல் சொல்கிறான். இதை நான் பீட்டரிடம் சொன்னேன். 'உன் மைக்கேல் ஒரு முட்டாள்' என்று பீட்டர் சொன்னான். (நகைக்கிறாள்) ஆனால், 'பீட்டர் என்ன புளுகு புளுகுகிறான் ! ஒரு முட்டாளிடமிருந்து வேறு என்னத்தை எதிர்பார்க்க முடியும் ?' என்று நேற்றுத் தான் என்னிடம் மைக்கேல் சொன்னான். (நகைக்கிறாள்)*

இலியுஷா : *நானயிருந்தால், அவனிடம் 'நீ அவனைப் பற்றித் தூஷிக்கிறாய் ; அவன் உன்னைப் பற்றித் தூஷிக்கிறான்' என்று சொல்லி யிருப்பேன்.*

மீட்யா : ஆனல், அவர்களில் யார் முட்டாள் என்று எனக்குத் தெரியவில்லை.

ஸோன்யா : இருவருமே முட்டாள்கள். பிறத்தியாரை முட்டாள் என்று சொல்லுகிறவன், தானே ஒரு முட்டாளாய்த்தா னிருப்பான்.

இலியுஷா : அப்படியானல், சரி. நீ அந்த இருவரையும் முட்டாள்கள் என்ருய்; ஆகையால், நீயும் ஒரு முட்டாளாய்த்தான் இருக்க வேண்டும்!

மீட்யா : அந்த இருவரும், ஒருவரை யொருவர், மற்றவர் இல்லாத இடத்திலே, 'முட்டாள்' என்று தூஷிப்பது எனக்குப் பிடிக்கவில்லை. நான் பெரியவளாய் வளரும்போது, அப்படிச் செய்யமாட்டேன். என் மனதி லிருப்பதை நேருக்கு நேரே பிறத்தியாரிடம் சொல்லி விடுவேன்.

இலியுஷா : நானுங் கூட அப்படித்தான்.

ஸோன்யா : நான் நாஞகவே இருப்பேன்.

மீட்யா : 'நாஞகவே யிருப்பேன்' என்ருல் என்ன ?

ஸோன்யா : அதாவது, என் மனதி லிருப்பதை, எனக்கு இஷ்ட மிருந்தால் சொல்லுவேன்; இல்லாவிட்டால் சொல்ல மாட்டேன்.

இலியுஷா : நீ ஒரு முட்டாள் என்பதையே இது காட்டுகிறது.

ஸோன்யா : பிறத்தியாரைப்பற்றிக் கேவலமாய்ப் பேசுவதில்லை என்று நீ இப்போதுதானே சொன்ஞய்!

இலியுஷா : ஆனல், இதை நான் உன் முதுகுக்குப் பின்னல் சொல்லவில்லையே!

# 6. அன்பு

மாஷா :
மிஷா : } இரு குழந்தைகள்
ஒரு கிழவி

**மாஷா :** (*கோபத்தோடு மிஷாவிடம்*) : இல்லை, அப்படியில்லை! அந்தக் கோலை எடுத்து விட்டா முட்டாளே!

**கிழவி :** (*வெளியே வாசற் படிக்கு வந்து, கையால் சிலுவை யடையாளஞ் செய்துகொண்டு, தனக்குத் தானே சொல்கிறள்*) : கிறிஸ்து அவளை ஆசிர்வதிக்கட்டும்; என்ன உத்தமி இவள்! எல்லாரிடமும் இவள் என்ன அன்பாயிருக்கிறுள்!

(*சிறுவர்கள் விளையாடுவதை விட்டு, கிழவியைப் பார்க்கிறுர்கள்.*)

**மாஷா :** யாரைப்பற்றிப்பேசுகிறுய்?

**கிழவி :** உன் தாயாரைப் பற்றி. அவள் கடவுளை நினைக்கிறுள்; ஏழைகளாகிய எங்களிடம் கருணை காட்டுகிறுள். எனக்கு இப்போதுதான் அவள் ஒரு ரவிக்கை கொடுத்தாள்; அதோடு

கொஞ்சம் தேநீரும் பணமும் கொடுத்தாள். பகவானும் பராசக்தியும் அவளுக்கு அருள் புரியட்டும்! அதோ அங்கேயுள்ள அஞ்ஞானி மாதிரி அவள் இல்லை. 'உன் மாதிரி எத்தனையோ பேர் திருட்டுத் தனமாய் இங்கே சுற்றித் திரிகிறார்கள்' என்று அந்த அஞ்ஞானி சொல்லுகிறான். அவனுடைய நாய்கள் மகா மூர்க்கமா யிருக்கின்றன. அவைகளிடமிருந்து நான் தப்பி வந்ததே பெரும் பாடாகி விட்டது.

மாஷா: அது யார்?

கிழவி: கள்ளுக் கடைக்கு எதிரே யிருக்கிறானே, அந்த மனுஷன். சே! என்ன கடின சித்தம் அவனுக்கு! அவன் அப்படியே யிருக்கட்டும். இவள் மகராஜி. இவளிடம் நான் ரொம்ப நன்றி பாராட்டுகிறேன். இவளே என் துக்கத்தில் எனக்கு உதவி புரிந்து, ஆறுதல் அளித்தாள். இவள் போன்ற மனுஷர்கள் இல்லா விட்டால், நாங்களெல்லாம் எப்படி வாழ்வோம்? (அழுகிறாள்)

மாஷாவும் மிஷாவும்: ஆமாம், அம்மா ரொம்ப அன்பாய்த்தான் நடக்கிறாள்.

கிழவி: குழந்தைகளே, நீங்கள் வளர்ந்து பெரியவர்களாகும் போது, இவளைப் போலிருங்கள்; ஏழைகளை மறக்காதீர்கள். அப்பொழுதுதான் கடவுளும் உங்களை மறக்கமாட்டார். (போகிறாள்)

மிஷா: ஐயோ பாவம், ஏழைக் கிழவி!

மாஷா: அவளுக்கு அம்மா ஏதோ கொடுத்தாளே, அது எனக்குச் சந்தோஷமாயிருக்கு.

மிஷா : நம்மிடம் ஏராளமா யிருக்கும் போது, நாம் ஏன் அவளுக்குக் கொஞ்சம் கொடுக்கக் கூடாது? நமக்கோ இது அற்பம்; தேவையில்லை. அவளுக்குத் தேவையா யிருக்கிறது.

மாஷா : 'இரண்டு அங்கிகள் உள்ளவன் ஒன்றைக் கொடுத்து விடுவானாக' என்று யோவான் ஸ்நாநகன் கூறியது உனக்கு நினை விருக்கிறதா?

மிஷா : ஆஹா! நான் பெரியவளாய் வளரும் போது, சகலத்தையும் பிறத்தியாருக்குக் கொடுத்து விடுவேன்.

மாஷா : நீ அப்படிச் செய்ய முடியாது.

மிஷா : ஏன் முடியாது?

மாஷா : எல்லாவற்றையும் கொடுத்து விட்டா யானால், உன் கதி என்ன ஆகும்?

மிஷா : எனக்கு எல்லாம் ஒன்றுதான். நாம் சகலமானவரிடமும் அன்பா யிருந்தோமானால், எல்லாம் நன்மையாகவே முடியும்.

*(விளையாட்டை விட்டு, உள்ளே தன்னுடைய அறைக் குப் போகிறான். நோட்டுப் புத்தகத்திலிருந்து ஓர் ஏட்டைக் கிழித்து, அதில் என்னவோ எழுதி, தன் ஜேபியில் போட்டுக் கொள்ளுகிறான்.*

*அந்தத் தாளில் எழுதப்பட்டிருந்ததாவது:* 'நாம் அன்பா யிருக்கவேண்டும்.')

# 7. மது பானம்

மகர்க்கா : *வயது* 12

மர்புட்கா : *வயது* 6

பாவ்லுஷ்கா : *வயது* 10

உபாத்தியாயர்.

(*ஒரு வீட்டுக்குள்ளே யிருந்து* **மகர்க்காவும், மர்புட்கா** *வும் தெருவுக்கு வருகிறார்கள்.* **மர்புட்கா** *அழுது கொண்டிருக்கிறாள். பக்கத்து வீடொன்றில் வாயிற்படியில்,* **பாவ்லுஷ்கா** *நின்று கொண்டிருக்கிறாள்.*)

**பாவ்லுஷ்கா :** *இந்த ராத்திரி வேளையில், நீங்கள் எங்கே போகிறீர்களடி!*

**மகர்க்கா :** *அவர் மறுபடியும் குடிச்சிருக்கார்.*

**பாவ்லுஷ்கா :** *யார்? புரொகார் மாமாவா?*

**மகர்க்கா :** *வேறு யாரா யிருப்பார்கள்?*

**மர்புட்கா :** *ஐயோ! அம்மாவை, அவர் அடிக்கிருரே!*

**மகர்க்கா :** *நான் திரும்பி உள்ளே போகமாட்டேன். என்னையும் அவர் அடிப்பார்.* (*நிலைப்படியில்*

உட்காருகிறாள்.) இந்த ராத்திரி பூராவும் இங்கேயே கழித்துவிடப் போகிறேன். நான் உள்ளே போக மாட்டேன்.

(மௌனம். மர்புட்கா அழுகிறாள்.)

பாவ்லுஷ்கா: வாயை மூடு. அழுது என்ன லாபம்? நாம் என்ன செய்வது? நீங்கள் ஓடிப் போங்கள்.

மர்புட்கா: (கண்ணீருடன்) நான் மட்டும் ஜார் அரசனாயிருந்தால், அப்பாவுக்குச் சாராயம் கொடுக்கிறார்களே அவர்களை நசுக்கிப் போடுவேன். யாரையுமே சாராயம் விற்க விடமாட்டேன்.

மகர்க்கா: பேஷான யோசனை! ஜார்தானே சாராயம் விற்கிறார். தமது லாபம் போய் விடுமோ இல்லையோ, அதற்காகப் பிறத்தியார் சாராயம் விற்கப்படாதென்று ஜார் தடுத்திருக்கிறார்.

பாவ்லுஷ்கா: என்ன பிதற்றுகிறாய்!

மகர்க்கா: பிதற்றுகிறேனா! பேஷ்! அகூலினா ஏன் ஜெயிலுக்குப்போனாள் என்று, போய்க் கேள். லைசென்ஸ் இல்லாமல் சாராயம் விற்றாளாம்; அது ஜாருக்கு நஷ்டமாகி விட்டதாம். அதற்காகத் தான் அவளை ஜெயிலுக்கு அனுப்பி விட்டார்கள்.

பாவ்லுஷ்கா: அதற்காகவா? அவள் ஏதோ சட்டத்தை மீறினாள் என்றல்லவா சொன்னார்கள்....?

மகர்க்கா: ஆமாம்; லைசென்ஸ் இல்லாமல் சாராயம் விற்பது சட்ட விரோதமாகும்.

மர்புட்கா: நானாயிருந்தால், யாரையுமே சாராயம் விற்க விட மாட்டேன். சாராயந்தான் சகல

தீமையையும் செய்கிறது. சில சமயம் அவர் சரியா யிருக்கிறார். குடித்து விட்டால், எல்லாரையும் மகா குரூரமாய் அடிக்கிறார்.

பாவ்லுஷ்கா : நீ சொல்லுவ தெல்லாம் விசித்திரமா யிருக்கிறது! நாளைக்கு நம் உபாத்தியாயரை நான் கேட்கிறேன். அவருக்கு இதைப்பற்றி எல் லாம் தெரிந்திருக்கும்.

மகர்க்கா : சரி; கேளு.

(அடுத்த நாள் காலை, மகர்க்காவின் தந்தை புரோகார், இர விலே தூங்கி மது மயக்கம் தெளிந்தவராய், ராத்திரிக் குடியால் ஏற்பட்ட தேக சிரமங்களைத் தீர்த்துக் கொள்ளுவதற்காக, இப் போது கொஞ்சம் குடிக்கச் செல்கிறார். மகர்க்காவின் தாய், கறுத்து வீங்கிய கண்களுடன், ரொட்டிக்கு மாவு பிசைந்து கொண்டிருக்கிறாள். பாவ்லுஷ்கா பள்ளிக்கூடம் செல்லுகிறான். அங்கே பையன்கள் இன்னும் வந்து சேரவில்லை. பள்ளிக்கூடத் தின் வெளிக் 'கமான் வளைவு'க் குள்ளே உபாத்தியாயர் உட்கார்ந்து, சுருட்டுப் புகைத்துக் கொண்டிருக்கிறார். பையன் கள் ஒவ்வொருவராய் உள்ளே சென்று கொண்டிருக்கிறார்கள்.)

பாவ்லுஷ்கா : (உபாத்தியாயரின் அருகில் சென்று) ஐயா! இதைச் சொல்லுங்கள்....ஜார் சாராயம் விற் கிறாராம்; ஆனால், அகூலினா சாராயம் விற்றதற்காக அவளைச் சிறைக்கு அனுப்பி விட்டார்களாம்— இப்படி நேற்று ஒருத்தி சொன்னாள். இது நிஜமா?

உபாத்தியாயர் : உனக்கு அப்படிச் சொன்ன வள் யாரா யிருந்தாலும், அவள் ஒரு முட்டாள். அவளை நீ நம்பியதும் முட்டாள் தனம். ஜார் எந்தத் தொழிலும் செய்யவில்லை—அதனால்தான், அவர்

ஜாரா யிருக்கிறார். லைசென்ஸ் இல்லாமல், அகூ லினு சாராயம் விற்றாள்; அதனால், சர்க்கார் கஜானாவுக்கு நஷ்டமுண்டாயிற்று. அதற்காகவே, அவளைச் சிறையில் போட்டார்கள்.

பாவ்லுஷ்கா: அவளால் எப்படி நஷ்டம் உண்டா யிருக்க முடியும்?

உபாத்தியாயர்: மது வகைகளுக்குக் கலால் தீர்வை உண்டு. இரண்டே முக்கால் காலன் சாராயத் துக்கு, சர்க்கார் கஜானாவிலிருந்து இரண்டு பணம் செலவாகும். அந்த இரண்டேமுக்கால் காலனும், எட்டரைப் பணத்துக்கு விற்கும். இதில் செலவு போன மிச்சம், சர்க்காருக்கு வருமானமாகிறது. அந்த வருமானம் ஏராளமாகும்-எழுபது கோடி பணமாகும்.

பாவ்லுஷ்கா: ஆகையால், எத்தனைக் கெத்தனை அதிகமாய் ஜனங்கள் சாராயம் குடிக்கிறார்களோ, அத்தனைக் கத்தனை அதிகமாய்ச் சர்க்காருக்கு வருமானம் கிடைக்குமோ?

உபாத்தியாயர்: ஆமாம். இந்த வருமானம் இல்லாவிட்டால், சேனைக்கும் பள்ளிக்கூடங்களுக் கும் இன்னும் நமக்குத் தேவையான மற்றக் காரி யங்களுக்கும் போதுமான பணம் கிடைக்காது.

பாவ்லுஷ்கா: இதெல்லாம் சகல ஜனங்களுக் கும் தேவைதானே. அப்படி இருக்க, இதற்கெல் லாம், நம்மிடம் நேரடியாய்ச் சர்க்கார் பணவசூல் செய்து கொள்ளட்டுமே? எதற்காகச் சாராயத் தின் மூலம் வசூலிக்க வேண்டும்?

[library stamp]

பாவ்லுஷ்கா: 'எதற்காகச் சாராயத்தின் மூலம் வசூலிக்கவேண்டும்?' என்று கேட்கிறாய்! அதுவா? அது ஏனென்றால், அதுதான் சட்டம். சரி, குழந்தைகளே! எல்லாரும் வந்தாயிற்று? அவரவர்களுடைய இடத்துக்குப் போங்கள்.

# 8. மரண தண்டனை

பீட்டர் பெட்ரோவிச்: *ஒரு புரொபஸர்.*

மார்யா இவானேவ்னு: *புரொபஸரின் மனைவி.*

பெட்யா: *அவர்களுடைய மகன்; வயது 9.*

ஐவான் வாஸிலேவிச்: *ராணுவ பப்ளிக்-பிராஸிக்யூட்டர்.*

(*மார்யா இவானேவ்னு தையல் தைத்துக் கொண்டிருக்கிறள். தன் தந்தையின் சம்பாஷணையை, பெட்யா கேட்டுக் கொண்டிருக்கிறன்.*)

**ஐவான் வாஸிலேவிச்:** *சரித்திரத்தில் காணப்படும் படிப்பினைகளை நாம் மறுக்க முடியாது. அடக்கு முறை - அதாவது சமூகத்துக்கு அபாயமான மனிதர்களைக் களைந்தெறியும் காரியம் - பலன் தரத்தான் தருகிறது. பிரஞ்சுப் புரட்சிக்குப் பின் இதைக் கண்டோம். அது மட்டிலுமல்ல; சரித்திரத்தின் இதர காலங்களிலும் இது நடந்திருக்கிறது. இப்போது ருஷ்யாவிலும் இந்த வேலை மீண்டும் இதோ நடக்கிறது.*

பீட்டர் பெட்ரோவிச்: இல்லை. அதை நாம் நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. முடிவான விளைவுகள் என்ன ஆகுமென்று நாம் அறியோம். ஆகையால், தற்போதைய *சட்டங்கள் சம்பந்தமாக இந்த உதாரணத்தைக் கூறுவது நியாயமல்ல.

ஐவான்: ஆனால், இந்த விசேஷச் சட்டங்கள் கெடுதிதான் விளைவிக்கும் என்று நாம் சொல்லி விட முடியாது; அன்றியும், கெடுதல் விளையுமானால், அது இந்தச் சட்டங்களை அமுல் செய்த பலன் தான் என்றும் சொல்ல முடியாது.. இது ஒரு விஷயம். இன்னொன்று: சில மனிதர்கள் மனித சுபாவத்தை அடியோடு கைவிட்டு மிருகங்களாகி விடுகிறார்கள். அவர்களை மிகவும் கடுமையாய்த் தான் தண்டிக்க வேண்டும். உதாரணமாக, இந்த மனிதனின் விஷயத்தையே எடுத்துக்கொள்வோம். இவன் ஒரு கிழவியையும் அவளுடைய மூன்று குழந்தைகளையும் அற்பமான முந்நூறு வெள்ளிக் காசுக்காகச் சிறிதும் திரவமின்றிக் கொன்று விட்டானே - இவனுக்கு மரண தண்டனை விதிக்காமல் வேறே என்ன செய்வது?

பீட்டர்: மரண தண்டனையே கூடாது என்று நான் அடியோடு ஆட்சேபிக்கவில்லை. ராணுவ அதிகாரிகளே நியாயாதிபதிகளாய் விளங்கும் கோர்ட் மார்ஷல்களைத்தான் நான் எதிர்க்கிறேன். அவர்கள் அடிக்கடி மரண தண்டனை விதித்து விடுகிறார்கள். திரும்பத் திரும்ப விதிக்கிற இந்தத் தண்டனை

* பலவந்தப் பாதுகாப்பு என்று ஒரு வகை ராணுவச் சட்டம் அப்போது ருஷ்யாவில் அமுலில் இருந்தது. அந்தச் சட்டத்தைத் தான் பீட்டர் குறிப்பிடுகிறார்.

மற்றவரைத் தடுக்கும் சக்தி யுடையதாயிருந்தால், பாதகமில்லை. அப்படிக்கல்லாமல், ஜனங்களை இது கோழைகளாக்கி விடுகிறது; சகோதர மனிதர்கள் கொலை செய்யப்படுவதைக் கண்டும் அசட்டையா யிருக்கச் செய்கிறது.

ஐவான்: மறுபடியும் அதையே தான் சொல்ல வேண்டி யிருக்கிறது. அதாவது, முடிவிலே என்ன பலன்கள் விளையுமோ என்று நாம் அறியோம்; ஆனால், நமக்குத் தெரிந்திருப்பவை நல்ல பலன்கள்....

பீட்டர்: நல்ல பலன்களா?

ஐவான்: ஆமாம்; தற்போது சத்தியாக விளையும் நல்ல பலன்களை நாம் மறுக்க முடியாது. துஷ்டர்கள் செய்யும் பாதகச் செயல்களுக்குத் தக்கவாறு, சமூகம் எப்படி அவர்களுக்குப் பதிலுக்குப் பதில் செய்வது?

பீட்டர்: சமூகம் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்றா சொல்லுகிறாய்?

ஐவான்: பழிக்குப் பழியே அல்ல! அதற்கு நேர் மாறாகும் இது. அதாவது, தனிப்பட்டவன் பழிக்குப் பழி வாங்குவதற்குப் பதிலாக, சமூகமே பதிலுக்குப் பதில் செய்யவேண்டும்.

பீட்டர்: சரிதான். ஆனால், நிரந்தரமான ஒரு சட்டம் செய்து வைத்துக் கொண்டு, அதன் பிரகாரம் இதைச் செய்யவேண்டும்; விசேஷச் சட்டங்கள் கூடாது.

ஜவான்: தனிப்பட்டவர்கள் பழிக்குப் பழி வாங்கினால், அது மனந் தோன்றியபடியும் மிகையாகவும் சட்ட வரம்பைக் கடந்தும் இருக்கும்; பெரும்பாலும், நியாய மின்றியும் தவருகவும் அது நடந்து விடுகிறது. இப்படித் தனிப்பட்டவர்கள் பழிக்குப் பழி வாங்குவதற்குப் பதிலாகத்தான், சமூகமே பதிலுக்குப் பதில் செய்கிறது.

பீட்டர்: (ஆத்திரத்துடன்) ஆகவே சமூகம் விதிக்கும் இந்தத் தண்டனை மட்டில், மனம் போன படியும் சந்தேகத்துக்கு இடம் இல்லாதவாறும் தவறுதலே இல்லாமலும் நடக்கிறதென்ரு சொல்லுகிருய்? இல்லவே யில்லை; நான் அதை ஒரு போதும் ஒப்புக் கொள்ள மாட்டேன்! இந்த விசேஷச் சட்டங்களால் ஆயிரக்கணக்கான பேர் மரண தண்டனை விதிக்கப்பட்டு மாண்டார்கள். இத்தனையும் நியாயந் தான், தர்மந்தான், நல்லது தான் என்பதா உன் வாதம்? நான் மாத்திரமல்ல; வேறு எவராயிருந்தாலும், உன் வாதத்தால் திருப்தியடைய மாட்டார்கள். (எழுந்து, படபடப்புடன் அந்த ஜிங்தும் நடக்கிறன்.)

பெட்யா: (தாயாரை நோக்கி) அம்மா! அப்பாவுக்கு என்ன கோபம்?

மார்யா: இத்தனை பேருக்கு மரண தண்டனைகள் விதிப்பது தப்பு என்று அப்பா நினைக்கிருர்.

பெட்யா: ஜனங்களைக் கொன்று விடுகிருர்கள் என்ரு சொல்லுகிருய்?

மார்யா: ஆமாம்; இவ்வளவு அதிகமான பேரைக் கொல்லக் கூடாதென்று அப்பா நினைக்கிருர்.

பெட்யா : (தந்தையிடம் சென்று) அப்பா! பைபிளில் உள்ள பத்துக் கற்பனைகளில் ஒன்று 'கொலை செய்யாதே' என்கிறதல்லவா. ஆகவே, கொலையே செய்யக்கூடாதே!

பீட்டர் : (புன்சிரிப்புடன்) நாங்கள் இப்போது பேசிக் கொண்டிருக்கும் விஷயத்துக்கு அது பொருந்தாது. தனிப்பட்டவர்கள் ஒருவரை யொருவர் கொல்லக் கூடாது என்றுதான் அந்தக் கற்பனை சொல்லுகிறது.

பெட்யா : ஆனாலும் ஜனங்களுக்கு மரண தண்டனை விதித்து நிறைவேற்றினால், அவர்களும் கொலைதானே செய்யப் படுகிறார்கள்? இல்லையா?

பீட்டர் : கொலைதான் செய்யப் படுகிறார்கள். ஆனால், எப்போது, எதற்காக அதைச் செய்யலாம் என்பதை நீ தெரிந்து கொள்ள வேண்டும்.

பெட்யா : எப்போது செய்யலாம்?

பீட்டர் : உனக்கு இதை நான் எப்படி விளக்குவது!....சரி; யுத்தத்தை உதாரணமாய்ச் சொல்லலாம்; அதில் கொல்லலாம். யாரையாவது ஒரு துஷ்டன் கொன்று விடுகிறான்; அவனைத் தண்டிக்காமல் விடலாமா?

பெட்யா : அப்படியானால், நாம் ஒவ்வொருவரையும் நேசிக்க வேண்டும், ஒவ்வொருவரையும் மன்னிக்க வேண்டும் என்று ஏசுவின் உபதேசம் ஏன் கூறுகிறது?

பீட்டர்: *அப்படிச் செய்ய முடியுமானல் நல்லது தான். ஆனல், அது முடியாது.*

பெட்யா: *ஏன் முடியாது?*

பீட்டர்: *ஓ! ஏனென்ருல், அது முடியாது!* (*பெட்யாவின் பேச்சைப் புன்சிரிப்புடன் கேட்டுக் கொண்டிருக்கும் ஐவானை நோக்கி*) *ஆகையால், ஐவான்! கண்ணியமுள்ள நண்பனே! இந்த விசேஷச் சட்டங்களையும் ராணுவ கோர்ட்டுகளையும் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்; ஒப்புக் கொள்ளவும் முடியாது.*

# 9. சிறைச்சாலை

செம்கா : *வயது* 13

அக்ஸாட்கா : *வயது* 10

மிட்கா : *வயது* 10

பலாஷ்கா : *வயது* 9

வன்கா : *வயது* 8

*(குழந்தைகளெல்லாம் காளான்களைப் பறித்துவிட்டு, ஒரு கிணற்றினருகே உட்கார்ந்துகொண் டிருக்கின்றன.)*

அக்ஸாட்கா : *மாட்ரினு மாமிஎன்ன வேதனைப்பட்டாள்! குழந்தைகளோ! ஒன்று அழுதது; உடனே எல்லாம் சேர்ந்து புலம்பத் தொடங்கிவிட்டன.*

வன்கா : *ஏன் இப்படி அவர்களெல்லாம் கலங்கி விட்டார்கள்?*

பலாஷ்கா : *ஏனு? அவர்களுடைய தகப்பனைச் சிறைக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களை மனங்கலங்கச் செய்ய, அது போதாதா?*

வன்கா : *ஏன் அவனைச் சிறைக்கு அழைத்துக் கொண்டு போனார்கள்?*

அக்ஸாட்கா : அது யாருக்குத் தெரியும்? அதிகாரிகள் வந்தார்கள்; அவனைத் தயாராகும்படி சொன்னார்கள்; அழைத்துக்கொண்டு போய் விட்டார்கள். அதை எல்லாம் நாங்கள் பார்த்தோம்.

செம்கா : குதிரைகளைத் திருடியதற்காகத்தான், அவனை அவர்கள் பிடித்துக்கொண்டு போனார்கள். டெம்கின் திருட்டுப் போயிற்று. கிராஸனேவ் திருட்டுப் போனதும் அவனுடைய வேலைதான். நம் குதிரைகள்கூட அவனுடைய பிடியில் அகப்பட்டுக் கொண்டன. இப்படியெல்லாம் செய்ததற்கு, அவனைத் தட்டியா கொடுப்பார்கள்?

அக்ஸாட்கா : ஆமாம்; எனக்கு இதெல்லாம் தெரியும். ஆனால், அந்தக் குழந்தைகளுக்காக, நான் பரிதாபப்படுகிறேன். நான்கு குழந்தைகள் இருக்கின்றனவே, உனக்குத் தெரியாதா? அவைகளுக்கு ரொட்டிகூடக் கிடையாது. இன்று அவைகள் நம்மிடம் வந்து பிச்சை கேட்டன.

செம்கா : பின்னே, அவர்கள் திருடக்கூடாது.

மிட்கா : நிஜந்தான். ஆனால், தகப்பன் அல்லவா திருடினன்; குழந்தைகள் திருடவில்லையே. அப்படியிருக்க, அவை ஏன் பிச்சை யெடுக்க வேண்டும்?

செம்கா : திருடக் கூடாது என்று அவைகள் படிப்பினை பெறத்தான்.

மிட்கா : ஆனல், திருடியது குழந்தைகள் அல்லவே; தகப்பனர் தானே?

செம்கா : சேச்சே! நீ சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கிறாயே! குழந்தைகள் - குழந்தை

கள்! அவன் ஏன் அநியாயம் செய்தான்? அவனுக்கு ஏராளமான குழந்தைகள் இருப்பதால், அவனைத் திருடவிடுவதா?

வன்கா: சிறையிலே அவனை அதிகாரிகள் என்ன செய்வார்கள்?

அக்ஸாட்கா: அவனை அங்கே சும்மா வைத்திருப்பார்கள் - அவ்வளவுதான்.

வன்கா: அவனுக்குச் சாப்பாடு கொடுப்பார்களோ?

செம்கா: ஆமாம், கொடுப்பார்கள்; பழிகாரத் திருடன்! அவனுக்கென்ன கேடு சிறையிலேயிருந்தால்? சகல சௌகரியங்களும் அளிப்பார்கள்; அவன் சௌக்கியமாக உட்கார்ந்து கொண்டிருப்பான். நான் மட்டில் ஜார் ராஜாவாக இருந்தால், குதிரைத் திருடர்களை எப்படி நடத்துவேன் தெரியுமா? திருட்டை மறுபடியும் நினைக்கவே நினைக்காதபடி அவர்களுக்கு நல்ல பாடம் போதிப்பேன்! ஆனால், இப்போது என்ன நடக்கிறது? அவன் அங்கே சுகமாகத் தன் இனமான நண்பர்களோடு சேர்ந்து உட்கார்ந்து கொண் டிருக்கிறான்; அவர்கள் ஒருவருக் கொருவர், இன்னும் கெட்டிக்காரத்தனமாய்த் திருடுவதெப்படி என்று சொல்லிக் கொடுத்துக் கொண் டிருக்கிறார்கள். பெட்ருகா சிறுவனயிருந்த போது, நல்ல பையனய்த்தான் இருந்தானும். அவன் ஒரே ஒரு தடவை சிறைக்குப் போய் வந்தவுடனே, மகா போக்கிரியாகி விட்டானும். அப்புறம் அவன் திருந்த வழியே இல்லாமல்

போய்விட்டது என்று என் தாத்தா சொல்லியிருக்கிறார். அதுமுதல், அவன் இப்படி ஆரம்பித்துவிட்டானும்....

வன்கா : அப்படியானால், அவர்களை ஏன் உள்ளே அடைத்துப் பூட்டி வைக்கிறார்கள்?

செம்கா : ஓ! அவர்களையே போய்க் கேளு.

அக்ஸாட்கா : அவனை உள்ளே அடைத்துப் பூட்டுகிறார்கள்; பிறகு, அவனுக்கு உணவு கொடுக்கிறார்கள்........

செம்கா : தன் வேலையை இன்னும் நன்றாகச் செய்ய, அவன் கற்றுக்கொள்ள வேண்டாமா? அதற்காகத்தான்!

அக்ஸாட்கா : ஆனால், அவனுடைய குழந்தைகளும் மனைவியுமோ, பட்டினி கிடந்து சாகிறார்கள்! இவர்கள் நம் அண்டை வீட்டுக்காரர்கள் அல்லவா! ஆகையால், எனக்கு இவர்களிடம் பரிதாபமாயிருக்கிறது. இவர்களுடைய கதி என்ன ஆகும்? நம்மிடம் வந்து பிச்சை கேட்கிறார்கள்; நாமோ கொடுக்காமல் இருக்க முடியவில்லை.

வன்கா : பின் ஏன் அவர்களை அதிகாரிகள் சிறையில் போடுகிறார்கள்?

செம்கா : அவர்களை வேறு என்னதான் செய்வது?

வன்கா : வேறு ' என்னதான் செய்வதா?.... நல்லது, எப்படியாவது....அவர்கள் திருந்த....

செம்கா: 'எப்படியாவது' என்கிறாய்? ஆனால், 'எப்படி' என்று உனக்கே தெரியவில்லை. நம்மை விடப் புத்திமான்க ளெல்லாம் இதைப்பற்றி யோசித்துப் பார்த்து விட்டார்கள். அவர்க ளாலேயே இதற்கு ஒரு வழி கண்டுபிடிக்க முடிய வில்லை.

பலாஷ்கா: நான் ஜார் ராணியா யிருந்தேனானால் என்ன செய்வேன் தெரியுமோ?....

அக்ஸாட்கா: (சிரித்துக்கொண்டு) நல்லது, ஜார் மகா ராணியே! என்ன செய்வாய்?

பலாஷ்கா: யாருமே திருடாதபடி செய்து விடு வேன்; குழந்தைகளும் அழமாட்டா.

அக்ஸாட்கா: சரிதான்; அதை நீ எப்படிச் செய் வாய்?

பலாஷ்கா: எல்லாருக்கும் அவரவருக்குத் தேவை யான சகல பண்டங்களும் கிடைக்கும்படியும், யாருக்கும் அநீதி நடக்காதபடியும் செய்வேன். அப்போது, எல்லாரும் எல்லா விதத்திலும் சௌகரியமா யிருப்பார்கள்.

செம்கா: பேஷ், ஜார் மகா ராணியே! ஆனால், இதையெல்லாம் நீ எப்படிச் செய்து முடிப்பாய்?

பலாஷ்கா: அது எனக்குத் தெரியாது; ஆனால் நான் எப்படியோ செய்து விடுவேன்.

மிட்கா: இந்த அடர்த்தியான காட்டுக்குள்ளே போவோமா? கொஞ்ச நாளைக்கு முன் ஒருநாள்,

இந்தக் குட்டிகளுக்கு அங்கே ஏராளமாய்க் காளான் கிடைத்தது.

செம்கா : பேஷான யோசனை. வாருங்கள் எல்லாரும். ஆனல், ஜார் மகாராணியே! உன் காளான் கொட்டிப் போகப் போகிறது ; ஜாக்கிரதையா யிரு. ஏனென்ருல், உன் கெட்டிக்காரத் தனம் வர வர ரொம்ப அபாரமாகிக் கொண்டிருக்கிறது !

*(எல்லாரும் எழுந்து, புறப்பட்டுப் போகிருர்கள்.)*

# 10. செல்வம்

ஒரு மிராசுதார் :

அவருடைய மனைவி :

வாஸ்யா : (*அவர்களுடைய ஆறு வயது மகன்*)

ஒரு பரதேசி :

(*மிராசுதாரும் அவருடைய மனைவியும் வராந்தாவில் உட்கார்ந்து, தேநீர் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மகளும் மகன் வாஸ்யாவும், கூட இருக்கிறார்கள். ஒரு வாலிபப் பரதேசி வருகிறான்.*)

மிராசுதார்: (*பரதேசியை நோக்கி*) என்னப்பா இது?

பரதேசி: (*வணங்கி*) உங்களுக்குத் தெரியவில்லையா, எஜமானே? வேலையில்லாமல் தவிக்கும் இந்த ஏழையிடம் கருணை காட்டுங்கள். பசியால் சாகிறேன்; கந்தலுடுத்தி வாடுகிறேன். மாஸ்கோவுக்குப் போனேன். திரும்பிவரக் காசில்லாமல் வழியெல்லாம் பிச்சையெடுத்துக் கொண்டு வருகிறேன். ஏழைக்கு உதவுங்கள்.

மிராசுதார்: நீ ஏன் இப்படி உணவும் துணியும் கிடைக்காமல் கஷ்டப்படுகிறாய்?

பரதேசி: என்னிடம் பணம் இல்லாததால் தான், எஜமானே!

மிராசுதார்: நீ வேலை செய்தாயானல், இவ்வளவு ஏழையா யிருக்க மாட்டாய்.

பரதேசி: நான் வேலை செய்யத் தயார். ஆனல், இந்தக் காலத்தில் ஒரு வேலையும் கிடைக்க மாட்டேனென்கிறதே. கருணை காட்டுங்கள், எஜமானே! இரண்டு நாளாய்ப் பட்டினி.

மிராசுதார்: (தமது மணிபர்ஸைப் பார்க்கிறர். பிறகு மனைவியை நோக்கிப் பிரஞ்சு பாஷையில்) உன்னிடம் ஏதாவது சில்லறை இருக்கிறதா? என்னிடம் நோட்டாய் இருக்கிறது.

மிராசுதாரின் மனைவி: (வாஸ்யாவைப் பார்த்து) போய் என் படுக்கைப் பக்கத்திலே ஒரு சின்ன மேஜை யிருக்கிறது பார், அதன் மேலே இருக்கிற பையை எடு; அதிலே ஒரு மணிபர்ஸ் இருக்கிறது. அதை எடுத்து வா. நீ சமத் தல்லவா!

[வாஸ்யா தாயார் சொல்லியதைக் காதில் வாங்காமல் பரதேசியை வைத்த கண் எடாமல் பார்த்துக் கொண்டிருக்கிறன்].

மிராசுதாரின் மனைவி: வாஸ்யா! காது கேட்கவில்லையா? (சட்டையைப் பிடித்து இழுக்கிறள்) வாஸ்யா!

வாஸ்யா: என்ன, அம்மா! (தாய், தான் சொன்னதை மீண்டும் சொல்லுகிறள். வாஸ்யா குதித்தோடுகிறன்) சரி; அம்மா! (இன்னும் பரதேசியைப் பார்த்த படியே நகருகிறன்.)

மிராசுதார்: (*பரதேசியைப் பார்த்து*) கொஞ்சம் இரு ஒரு நிமிஷம். (*பரதேசி ஒதுங்கி நிற்கிறன்.*)

மிராசுதார்: (*மனைவியை நோக்கிப் பிரஞ்சு பாஷையில்*) எத்தனை ஏராளமான ஜனங்கள் இப்படி வேலையில்லாமல் திண்டாடுகிருர்கள்! இதைப் பார்க்கையில் மகா பயங்கரமா யிருக்கிறது. எல்லாம் சோம்பேறித்தனம் தான் காரணம் - என்றாலும், இவன் பட்டினி யென்று சொல்லும் போது ரொம்பவும் சங்கடமா யிருக்கிறது.

மிராசுதாரின் மனைவி: இவர்கள் புளுகுகிருர்கள். வெளி நாட்டிலும் இதே மாதிரிதான் இருக்கிறது. நியூயார்க்கில் சுமார் லட்சம் பேர் வேலை யில்லாமல் திரிகிருர்களாம்! உங்களுக்கு இன்னும் கொஞ்சம் டீ வேணுமா?

மிராசுதார்: ஆமாம், கொஞ்சம் வேணும். ஆனல், சற்று லேசாய் இருக்கட்டும். (*புகை குடிக்கிறர். மௌனம்.*)

(*பரதேசி அவர்களைப் பார்க்கிறன்; தலையைச் சிலிர்க்கிறன்; தான் இருப்பது தெரியும் பொருட்டு இருமுகிறன். வாஸ்யா ஒரு மணிபர்ஸுடன் ஓடி வந்து, பரதேசி யிருக்கிறனு என்று கவனிக்கிறன். பிறகு, தாயிடம் மணிபர்ஸைக் கொடுத்த வண்ணம் பரதேசியை உறுத்துப் பார்க்கிறன்.*)

மிராசுதார்: (*மணிபர்ஸிலிருந்து மூன்று பென்னி காசை எடுத்து*) இந்தாப்பா - உன் பேர் என்ன? - இதை எடுத்துக் கொள்.

பரதேசி: (*தொப்பியை எடுத்து வணக்கம் செய்து காசை வாங்கிக்கொண்டு*) ஏழையிடம் பரிதாபம் காட்டியதற்கு ரொம்ப வந்தனம்.

மிராசுதார்: உனக்கு வேலை யில்லாம லிருக்கிறதே, அதுதான் எனக்கு ரொம்பவும் பரிதாபமாயிருக்கிறது. நீ வேலை செய்தால் பட்டினியால் கஷ்டப்படமாட்டாய். வேலை செய்பவனுக்கு வறுமை கிடையாது.

பரதேசி: (*தொப்பியைப் போட்டுக்கொண்டு, திரும்பி*) 'உழைத்தால் முதுகொடியும்; உழக்கு மட்டில் நிறையாது' என்பார்களே, அது உண்மை. (*போய் விடுகிறன்.*)

வாஸ்யா: அவன் என்ன சொன்னன்?

மிராசுதார்: உழவர்கள் முட்டாள்தனமாய் ஒரு பழமொழி சொல்லுவார்கள்; அதைச் சொல்லுகிருன். 'உழைத்தால் முதுகொடியும்; உழக்கு மட்டில் நிறை' யாதாம்!

வாஸ்யா: அதற்கு என்ன அர்த்தம்?

மிராசுதார்: வேலை செய்வதால், மனிதன் கூனிக் குறுகிப் போவானே யொழியப் பணக்காரன் ஆக மாட்டான் என்று அர்த்தம்.

வாஸ்யா: அது தப்பா?

மிராசுதார்: சந்தேக மில்லாமல் தப்புத்தான். இந்தப் பயல் மாதிரி வேலை செய்ய இஷ்டப்படாமல் நாடோடியாய்த் திரிந்து கொண்டிருப்பவர்கள் எப்

போதும் ஏழைகளாகவே இருப்பார்கள். உழைப்பவர்கள்தான் பணக்காரர் ஆகிறார்கள்.

வாஸ்யா: ஆனால், நாம் எப்படிப் பணக்காரர்களா யிருக்கிறோம்? நாம் வேலையே செய்ய வில்லையே!

மிராசுதாரின் மனைவி: (நகைத்து) அப்பா வேலை செய்ய வில்லை என்று உனக்கு எப்படித் தெரியும்?

வாஸ்யா: எனக்கு அது தெரியாது. ஆனால் நாம் ரொம்ப ரொம்பப் பணக்காரரா யிருக்கிறோம். ஆகையால், அப்பா ரொம்ப ஏராளமாய் வேலை செய்ய வேண்டும். அவர் அப்படி ரொம்பவும் கஷ்டப்பட்டு வேலை செய்கிறாரா?

மிராசுதார்: எல்லா வேலையும் ஒரே விதமானது அல்ல. என் வேலையை யார் வேண்டுமானாலும் செய்துவிட முடியாது.

வாஸ்யா: உங்கள் வேலை என்ன?

மிராசுதார்: உன்னைப் போஷித்து, உடை உடுத்தி, கல்வி அளிக்கிறேனே; அதுதான்.

வாஸ்யா: அவனும் தன் குழந்தைகளுக்கு இதையெல்லாம் செய்ய வேண்டியதுதானே? அப்படியிருக்க, அவன் மட்டில் ஏன் இவ்வளவு தரித்திரமாயிருக்க வேண்டும்; நாம் மட்டில் ஏன் இவ்வளவு....?

மிராசுதார்: (நகைத்து, இவன் ஓர் இயற்கை அபேதவாதியாக அல்லவா இருக்கிறான்!

**மிராசுதாரின் மனைவி:** ஆமாம், வாஸ்தவம் : 'ஆயிரம் ஞானிகளால்கூடப் பதில் அளிக்க முடியாத கேள்வி களை ஒரே ஒரு முட்டாள் கேட்டு விட முடியும்.' 'ஒரே ஒரு முட்டாள்' என்பதற்குப் பதில் 'ஒரே ஒரு குழந்தை' என்று போட்டு விட வேண்டும். எல்லாக் குழந்தைகளுமே இப்படித்தான் இருக்கின்றன.

# 11. தீமைக்கு நன்மை

மாஷா: 10 *வயது.*

வன்யா: 8 *வயது.*

**மாஷா:** *அம்மா திரும்பி வந்து, காரிலே நம்மை யும் அழைத்துக் கொண்டு போனால், என்ன ஜோரா யிருக்கும். முதலிலே பஜாருக்குப் போகவேணும்; அப்புறம் நட்ஸ்யா வீட்டுக்குப் போகவேணும். இது என் ஆசை. உன் ஆசை என்ன? இப்போது என்ன செய்தால் தேவலை என்று நீ நினைக் கிறாய்?*

**வன்யா:** *நான்? நான் நேற்று மாதிரி நடக்க வேண்டும் என்றே ஆசைப்படுகிறேன்.*

**மாஷா:** *அப்படியா? நேற்று என்ன நடந்தது? கிரிஷா உன்னை அடித்தான்; உடனே இரண்டு பேரும் புலம்பினீர்கள். அதிலே ஒன்றும் நன்மை யில்லை.*

**வன்யா:** *அதில்தான் நன்மை இருக்கிறது. அப்போது நான் ரொம்ப நல்லவளா யிருந்தேன்; அதை விட மேலாக எதுவும் இருக்க முடியாது.*

அதே மாதிரி இன்றும் நடக்காதா என்றுதான் நான் ஆசைப் படுகிறேன்.

மாஷா: நீ என்ன சொல்லுகிருய் என்றே எனக்குப் புரியவில்லை.

வன்யா: சரிதான்; என் கருத்தை விளக்கிச் சொல்லுகிறேன். உனக்கு ஞாபகம் இருக்கிறதா? போன ஞாயிற்றுக் கிழமை மாமா பாவெல் சொன்ஞரே....அவர் ரொம்ப நல்லவர்; இல்லையா?

மாஷா: ஆமாம்; எல்லாரும் அவரிடம் பிரியமாயிருக்கிருர்கள். அவர் ஒரு மகான் என்று அம்மா சொல்லுகிருள். அது ரொம்பவும் உண்மை.

வன்யா: சரி....போன ஞாயிற்றுக்கிழமை அவர் ஒரு கதை சொன்ஞரே, அது ஞாபகம் இருக்கிறதா? ஒரு மனிதனுக்கு எல்லாரும் கெடுதலே செய்தார்கள். அவனே அவர்களிட மெல்லாம் அன்பே செலுத்திஞன்; பிறர் எத்தனைக் கெத்தனை அதிகமாக அவனுக்குக் கெடுதல் செய்தார்களோ அத்தனைக் கத்தனை அதிகமாகவே அவர்களிடம் அவன் அன்பு செலுத்திஞன். அவனைப் பிறர் திட்டிஞர்கள்; அவனே அவர்களைப் புகழ்ந்தான். பிறர் அவனை அடித்தார்கள்; அவனே அவர்களுக்கு உபகாரம் செய்தான். அவன் மாதிரி நடந்து கொள்ளும் ஜனங்கள் மகிழ்ச்சியா யிருப்பார்கள் என்று மாமா சொன்ஞர். அந்தக் கதை எனக்கு ரொம்பவும் பிடித்தமாயிருந்தது. ஆகையால், கிரிஷா என்னை அடித்த போது, நான் அவனை முத்தமிட்டேன். உடனே

அவன் அழுது விட்டான். எனக்கோ ரொம்ப ஆனந்தமா யிருந்தது. ஆனால், இன்று நர்ஸிடம் அவ்வளவு அழகாய் என்னால் நடந்துகொள்ள முடிய வில்லை. அவள் என்னைத் திட்டினாள். நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை மறந்து, நானும் அவளை முரட்டுத்தனமாய்ப் பேசிவிட்டேன். கிரிஷாவிடம் நடந்து கொண்டதுபோல மறுபடியும் ஒரு முறை நடந்துகொள்ள வேண்டும் என்று எனக்கு எவ்வளவு ஆசையா யிருக்கிறது, தெரியுமா?

மாஷா: உன்னை யாராவது அடிக்கவேண்டும் என்கிறாயா?

வன்யா: அடித்தால், அதைப் பெற ரொம்பவும் ஆசையாகவே இருக்கிறேன். கிரிஷாவிடம் நடந் ததுபோலவே நடந்துகொண்டு, ரொம்பவும் இன்பம் அடைவேன்.

மாஷா: என்ன பிதற்றல்! நீ எப்போதுமே முட்டாளாய்த்தான் இருந்தாய்; இன்னும் அப் படியே இருக்கிறாய்!

வன்யா: அதைப் பற்றிப் பரவாயில்லை. சதா காலமும் சந்தோஷமா யிருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று எனக்கு இப்போது தெரிந்துவிட்டது.

மாஷா: அட அடி முட்டாளே! அந்த மாதிரி நடந்தால், உண்மையிலேயே உனக்குச் சந்தோஷ மாகவா இருக்கிறது?

வன்யா: பரம சந்தோஷமா யிருக்கிறது!

# 12. பத்திரிகைகள்

வலோத்யா:

*ஹைஸ்கூல் மாணவன்        14 வயது.*

ஸோன்யா:        15 *வயது.*

மிஷா:        8 *வயது.*

ஒரு கூலியாள்.

*(வலோத்யா படித்துக் கொண்டும், வீட்டுக் கணக்கைச் செய்து கொண்டும் இருக்கிறன். ஸோன்யா எழுதிக் கொண்டிருக்கிறள். கூலியாள் ஒரு பெரிய மூட்டையைத் தூக்கிக் கொண்டு வருகிறன்; அவனைப் பின் தொடர்ந்து, மிஷா வருகிறள்.*

**கூலியாள்:** எஜமான்! இந்த மூட்டையை நான் எங்கே வைக்க? அப்பாடா! இதனல் என் புஜமெல்லாம் இற்றுப்போய் விட்டது.

**வலோத்யா:** உன்னை எங்கே வைக்கச் சொன்னார்கள்?

**கூலியாள்:** 'எஜமான் வருகிற வரையில், இப்போது சத்தியாக, பாட அறையில் வைத்திரு' என்று வாஸிலி டிமோபீவிச் சொன்னர்.

வலோத்யா : அப்படியானல் சரி; அந்த மூலையிலே போடு. (தன் படிப்பைக் கவனிக்கிறன். கூலியாள் தனது மூட்டையை இறக்கி வைத்துவிட்டு, 'அப்பாடா!' என்று பெருமூச்சு விடுகிறன்.)

ஸோன்யா : அவன் என்ன கொண்டு வந்திருக்கிறன் ?

வலோத்யா : 'உண்மை விளம்பி' என்று பெயர் கொண்ட ஒரு சமாசாரப் பத்திரிகையைக் கொண்டு வந்திருக்கிறன்.

ஸோன்யா : எதற்காக அதில் இவ்வளவு பெரிய கட்டு ?

வலோத்யா : ஒரு வருஷத்து இதழ்கள் அத்தனையும் சேர்ந்திருக்கின்றன. (படிப்பில் ஈடுபடுகிறன்.)

ஸோன்யா : இத்தனையையுமா ஜனங்கள் எழுதியிருக்கிறர்கள் ?

கூலியாள் : வாஸ்தவம்! இதையெல்லாம் எழுதியவர்கள் ரொம்பவும் சிரமப் பட்டுத்தான் வேலை செய்திருக்கிறர்கள்.

வலோத்யா : என்ன சொன்னுய் ?

கூலியாள் : இதையெல்லாம் எழுதியவர்கள், தங்கள் வேலையை மழுப்பாமல் செய்திருக்கிறர்கள் என்றே சொன்னேன். சரி; நான் போகிறேன். பத்திரிகைகளைக் கொண்டு வந்து போட்டுவிட்டேன். தயவு பண்ணி இதை வீட்டிலே சொல்லி விடு. (வெளியே போகிறன்.)

**ஸோன்யா:** (*வலோத்யாவை நோக்கி*) அப்பாவுக்கு எதற்காக இத்தனை பத்திரிகைகள்?

**வலோத்யா:** போல்ஷகாவ் எழுதியுள்ள வியாசங்களை யெல்லாம், அப்பா கத்தரித்து வைத்துக் கொள்ளப் போகிறார்.

**ஸோன்யா:** ஆனல், போல்ஷகாவின் கட்டுரைகளைக் கண்டால், தமக்குத் தலைவேதனை எடுக்கிறது என்று மாமா மிகேல் இவானேவிச் சொல்லுகிறாரே!

**வலோத்யா:** ஓஹோ! மாமா மிகேலுக்கு அப்படித் தோன்றுகிற தாக்கும். அவர் '*சர்வசத்யம்*' என்ற பத்திரிகையைப் படிக்கிறார்.

**மிஷா:** மாமாவின் '*சத்யம்*', இது அத்தனை பெரிசா யிருக்குமோ?

**ஸோன்யா:** இதைவிடப் பெரிசு! இது ஒரு வருஷமாகத்தான் வருகிறது; அதுவோ இருபது வருஷமாய் வந்து கொண்டிருக்கிறது.

**மிஷா:** என்ன! இது மாதிரி இருபது கட்டும், அதற்குமேலே இன்னுமோர் இருபதுமா?

**ஸோன்யா:** (*தலைநிமிராமலே*) ஆமாம்; அதனல் என்ன? இரண்டு பத்திரிகைகள் மாத்திரம் இவ்வளவு. இன்னும் வேறே முப்பது, நாற்பது பத்திரிகைகள் ருஷ்யாவில் மட்டிலும் வெளி வருகின்றன. வெளி நாடுகளில் வெளிவரும் பத்திரிகைகளையும் கணக்கிட்டால், ஆயிரம் பத்திரிகைகள் இருக்கும்.

மிஷா : *அவைகளையெல்லாம் சேர்த்தால், இந்த அறை அடங்காதோ?*

வலோத்யா : *இந்த அறை எந்த மூலை! நமது வீதி பூராவையும் அவைகள் நிறைத்து விடுமே. ஆனால், தயவு பண்ணி என்னைத் தொல்லை செய்யாதே. எனக்கு நாளைக்கு ஒரு பரீட்சை. உன் பிதற்றலால், என் படிப்புக்கு இடையூறு செய்கிறாய். (மீண்டும் படிக்கிறான்.)*

மிஷா : *இருந்தாலும் அவர்கள் இவ்வளவு ஏராளமாய் எழுதக்கூடாது.*

ஸோன்யா : *ஏன் கூடாது ?*

மிஷா : *ஏனென்றால், அவர்கள் எழுதுவது உண்மையா யிருந்தால், அது ஒரே ஒன்றாய்த்தான் இருக்கும். அதைத் திருப்பித் திருப்பி எப்போதும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அது உண்மை யில்லாதிருந்தால், அவர்கள் அதை எழுதவே கூடாது.*

ஸோன்யா : *இது உன் அபிப்பிராயம் !*

மிஷா : *சகிக்க முடியாதபடி இவ்வளவு ஏராளமாய் ஏன் அவர்கள் எழுதிக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள் ?*

வலோத்யா : *(புஸ்தகத்தை விட்டுத் தலைநிமிர்ந்து) ஏனென்றால், பத்திரிகைச் சுதந்தரத்துக்காகத் தான். பத்திரிகைச் சுதந்தரம் இல்லாவிட்டால், நாம் உண்மையை அறிய முடியாது.*

**மிஷா :** *ஆனல், ‘உண்மை விளம்பி’யில் உண்மை இருப்பதாக அப்பா சொல்லுகிருர்; ‘உண்மை விளம்பி’யைக் கண்டால் தமக்குத் தலைவேதனை எடுப்பதாக மாமா சொல்கிருரே? உண்மை ‘உண்மை விளம்பி’யில் இருக்கிறதா அல்லது ‘சர்வ சத்திய’த்தில் இருக்கிறதா என்று நமக்கு எப்படித் தெரியும்?*

**ஸோன்யா :** *மிஷா சொல்வது ரொம்ப சரி! பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் புஸ்தகங்களும் மிகவும் ஜாஸ்தியாய்த்தான் இருக்கின்றன.*

**வலோத்யா :** *பெண் பிள்ளை என்பதைக் காட்டி விட்டாய் - சதா மாறுகிருயே!*

**ஸோன்யா :** *இல்லை; அவை ரொம்ப ஏராளமாய் இருப்பதால், நம்மால் உண்மை எது என்று சொல்ல முடியவில்லை.*

**வலோத்யா :** *உண்மையைக் கண்டு பிடிப்பதற்குத்தான் கடவுள் ஒவ்வொருவருக்கும் விவேகத்தை அளித்திருக்கிருர்.*

**மிஷா :** *சரிதான்; ஒவ்வொருவருக்கும் விவேகம் இருந்தால், அவனவன் தனக்குத் தானே உண்மையைத் தீர்மானம் செய்து கொள்கிருன்.*

**வலோத்யா :** *போதும்; உன் தீர்ப்பைச் சொல்லி விட்டாய் அல்லவா! தயவு பண்ணி எங்கேயாவது போ; என்னைத் தொந்தரை செய்யாதே.*

# 13. *பச்சாதாபம்*

வோல்யா : 8 *வயதுச் சிறுமி.*

பெட்யா : 10 *வயதுச் சிறுவன்.*

பெட்யா : *நீ எங்கே யிருக்கிறு யென்று அம்மா பார்த்து வரச் சொன்னுள். நீ ஏன் அழுது கொண் டிருக்கிருய்? அதை நீ நர்ஸிடம் கொண்டு போய்க் கொடுத்தாயா? (தட்டுக் காலியா யிருக்கக் கண்டு 'உஸ்' என்று ஊதிக் கொண்டே) புட்டு எங்கே?*

வோல்யா : *எனக்கு .... எனக்கு ..... எனக்கு வேணும் போலே யிருந்தது....சட்டென்று, ஓ....ஓ.... ஓ....முன்பின் யோசிக்காமலே........சாப்பிட்டு விட் டேன்....*

பெட்யா : *நர்ஸிடம் கொண்டு போய்க் கொடுக்க வில்லையா? நீயேயா தின்று விட்டாய்? பேஷான வேலை! நர்ஸிடம் கொண்டு போய்க் கொடுக்க, நீ தான் ஆசைப்பட்டாய் என்று அம்மாவும் நினைத் தாளே!*

வோல்யா : *ஆமாம்; அப்படிக் கொடுக்கத்தான் ஆசைப்பட்டேன். ..........ஆனல், திடீரென்று....*

முன் பின் யோசனையே செய்யாமல்....ஓ.......ஓ
........ஓ....

**பெட்யா:** முதலில் ருசி பார்த்தா யாக்கும். பிறகு அத்தனையையும் விழுங்கி விட்டாய். பேஷ்! (நகைக்கிறான்.)

**வோல்யா:** ஆமாம். உனக் கென்ன; நீ சிரிக்கிறாய்? ஆனால், நான் அவர்களிடம் எப்படிச் சொல்லுவேன்!....என்னால் நர்ஸிடம் சொல்ல முடியாது; அம்மாவிடமும் சொல்ல முடியாது....

**பெட்யா:** சரிதான்; நீதானே செய்தாய்—ஹா—ஹா—ஹா—முழுக்கத் தின்று விட்டாய்! இப்போது அழுது என்ன பிரயோசனம்? மேற்கொண்டு என்ன செய்வதென்று யோசித்துப் பார்.

**வோல்யா:** என்ன யோசிக்கிறது? என்ன செய்வது?

**பெட்யா:** என்ன சங்கடம்! (சிரிக்காமல் இருக்க முயல்கிறான்; மௌனம் சாதிக்கிறான்).

**வோல்யா:** என்ன செய்வேன்? ரொம்ப வேதனையா யிருக்கிறதே! (அழுகிறாள்.)

**பெட்யா:** ஏன் இவ்வளவு கலங்குகிறாய்? அழாதே, நிறுத்து. அம்மாவிடம் போய், நீயே தின்று விட்டதாகச் சொல்லு.

**வோல்யா:** அது இன்னும் மோசமாய்ப் போய் விடுமே.

**பெட்யா:** அப்படியானால், நர்ஸிடம் போய் உன் குற்றத்தை ஒப்புக் கொள்.

வோல்யா: அது என்றால் எப்படி முடியும்?

பெட்யா: இதைக் கேள்! நீ இங்கேயே இரு. நான் நர்ஸிடம் ஓடி, இதைச் சொல்லுகிறேன். அவள் இதைப்பற்றி வருத்தப்பட மாட்டாள்.

வோல்யா: இல்லை; அவளிடம் ஒன்றும் சொல்லாதே. எப்படி நான் இதை அவளிடம் சொல்வேன்?

பெட்யா: சும்மா பிதற்றாதே! நீ தப்புப் பண்ணி விட்டாய். என்ன செய்வது? நான் அவளிடம் போய்ச் சொல்லுகிறேன். (ஓடுகிறான்).

வோல்யா: பெட்யா, பெட்யா, நில்!....ஓ!....அவன் போய் விட்டானே....நான் ருசி பார்க்கத் தான் எண்ணினேன்....பிறகு....எப்படித்தான் தின்றேனோ....எனக்கே ஞாபகமில்லை....என்ன செய்வேன்? (விம்மி விம்மி அழுகிறாள்.)

பெட்யா திரும்பி ஓடி வருகிறான்.

பெட்யா: அழுதது போதும், நிறுத்து! நர்ஸ் உன்னை மன்னித்து விடுவாள் என்று சொன்னேனல்லவா? அவள் சொன்னது! இதுதான்: 'ஐயோ அசட்டுத் தங்கம்!'

வோல்யா: அவள் கோபப்பட வில்லையா?

பெட்யா: கோபப்பட அவள் நினைக்கக் கூட இல்லை; 'சுவாமி அவளை ஸௌபாக்கியவதியாய் வைக்க வேண்டும். அந்தப் புட்டை நானே அவளுக்குக் கொடுத்திருப்பேனே!' என்றும் அவள் சொன்னாள்.

வோல்யா: *ஆனல் நீ பார், முன் யோசனை பண்ணி அதை நான் சாப்பிட வில்லை! (மீண்டும் அழத் தொடங்குகிறள்.)*

பெட்யா: *அதைப்பற்றி இப்போ தென்ன? நர்ஸ் உன்னை மன்னித்து விட்டாள். நாங்கள், அம்மாவிடம் சொல்லப் போவதில்லை.*

வோல்யா: *ஆமாம்; நர்ஸ் என்னை மன்னித்து விட்டாள். அவள் அன்பு நிறைந்தவள்; நல்லவள். ஆனல், நான் பொல்லாதவள், பொல்லாதவள் பொல்லாதவள்! அதுதான் எனக்கு அழுகை வருகிறது.*

# 14. கலை

வேலைக்காரன் :

தாதி :

பாவெல் : *சமையல்காரனின் கையாள்.*

நடாஷா : *எட்டு வயதுச் சிறுவன்.*

நினா : *ஹைஸ்கூல் மாணவி.*

ஸெனேச்கா : *ஹைஸ்கூல் மாணவன்.*

**வேலையாள் :** (*ஒரு தட்டைத் தூக்கிக்கொண்டு*) வா தாம் பருப்பும் பாலும் தேநீரும் கொஞ்சம் மதுவும் கொண்டுவந்திருக்கிறேன்.

**தாதி :** (*ஒரு மேஜோட்டை செய்துகொண்டு, அதன தையல்களை எண்ணுகிறாள்*)....இருபத்திரண்டு, இருபத்தி மூன்று....

**வேலையாள் :** *அவோத்யா வாஸிலேவ்னு! உன் காதில் விழவில்லையா? ஏ அவோத்யா வாஸிலேவ்னு!*

**தாதி :** விழுகிறது, விழுகிறது! நன்ருய் விழுகிறது! பாதி வேலையிலே போட்டுவிட்டு வரமுடியுமா? (*நடாஷாவை நோக்கி*) இதோ ஒரு நிமிஷம்; உனக்குப்

பழம் வாங்கித் தருகிறேன், கண்ணே! கொஞ்சம் பொறு. முதலில் பாலைத் தயார் செய்கிறேன்.

(பாலை வடிக்கட்டுகிறாள்.)

**வேலையாள்:** (உட்கார்ந்து கொண்டே) ஆமாம், நானும் இதை எத்தனையோ தடவை பார்த்தாச்சு! ஏன் ஜனங்கள் இதிலே தங்கள் பணத்தைக் கொட்டுகிறார்களோ, தெரியவில்லை!

**தாதி:** எதைப் பற்றிச் சொல்லுகிறாய்? ஜனங்கள் நாடகக் கொட்டகைக்குப் போகிறார்களோ? இன்று மிக நீளமான நாடகமாம்.

**வேலையாள்:** 'ஆப்பெரா' என்றால், எப்போதுமே நீளமாய்த்தான் இருக்கும். உட்கார்ந்து, உட்கார்ந்து நமது கால் மரத்துப் போய்விடும்.... அவர்கள் தயவு பண்ணி, அதை நான் பார்க்க அனுமதித்தார்கள். எனக்கு ஆச்சர்யமாயிருந்தது....

(சில பழங்களை எடுத்துக்கொண்டு, **பாவெல்** வருகிறான். இந்தப் பேச்சைக் கேட்டு நிற்கிறான்.)

**தாதி:** பாட்டுப் பாடினார்களோ?

**வேலையாள்:** ஆஹா, பாடினார்கள். ஆனால், என்ன பாட்டு வேண்டிக்கிடக்கு! வெறுங் கூச்சல், முட்டாள்தனமான கூச்சல்; கொஞ்சம்கூட உண்மையா யில்லை. 'அவளிடம் மெத்தக் காதல் ஆகினேன்' என்கிறான் வாலிபன்—ஆனால், அதைத் தன்னால் முடிந்தமட்டும் உரக்கக் கூச்சல் போடுகிறான்; துளிக்கூட நிஜம்போல் இல்லை. பிறகு அவர்களுக்குள் சண்டை வந்துவிடுகிறது; அவன் மறுபடியும் பாடத் தொடங்கிவிடுகிறான்.

நாதி: ஆனால், 'ஆப்பெரா'வுக்கு ஒரு ஸீஸன் டிக்கெட் வாங்குவதென்றால், ரொம்பப் பணம் கொடுக்க வேண்டுமாமே?

வேலையாள்: ஸோபாவுக்கு, பனிரண்டு ஆட்டத் துக்கு முந்நூறு ரூபாய் கட்டணம் செலுத்து கிறார்கள்.

நாதி: முந்நூறு ரூபாயா? அந்தப் பணம் யாரைச் சேருகிறது?

வேலையாள்: பாடுகிறவர்கள்தான் ஏராளமான பணத்தைப் பங்கு கொள்கிறார்கள். தலைமைப் பாடகி, வருஷம் ஒன்றுக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் சம்பாதிக்கிறாளாம்.

பாவெல்: ஆயிரமெல்லாம் வேண்டாம்....முந் நூறு ரூபாய் கிடைத்தால், அதுவே குடியானவனுக் குப் பிரமாதமான பணமாயிற்றே. நம்மில் சிலபேர் நமது வாழ்க்கை பூராவும் கஷ்டப்பட்டு உழைத்தும், ஒரு முந்நூறு ரூபாய்-ஏன், வெறும் நூறு ரூபாய் கூட-சேமிக்க முடியவில்லை.

(சமையலறைக்குள் நினா வருகிறாள்.)

நினா: நடாஷா இங்கே இருக்கிறானா? எங்கே யடா போயிருந்தாய்? உன்னை அம்மா கூப்பிடு கிறாள்.

நடாஷா: (ஒரு பழத்தைத் தின்று கொண்டு) இதோ ஒரு நிமிஷத்தில் வருகிறேன்.

நினா: (பாவெலைப் பார்த்து) நூறு ரூபாய் என்று என்னவோ சொன்னாயே, அது எதைப்பற்றி?

தாதி: இன்று 'ஆப்பெரா'வில் பாடப் போகிருர்களே அவர்களுக்கு ரொம்பச் சம்பளம் என்று (வேலையாளைச் சுட்டிக் காட்டி) ஸெமென் நிகொலாவிச் சொல்லிக் கொண்டிருந்தான். அதைக் கேட்டு, பாவெல் ஆச்சர்யமடைந்தான். ஒரே ஒரு பாடகி இருபத்தையாயிரம் ரூபாய் வரை சம்பளம் வாங்குவதாய்ச் சொல்லுகிருர்களே, நினு! அது நிஜமா?

நினு: அதைவிட அதிகமாய்க் கூட வாங்குகிருள்! ஒரு பாடகி அமெரிக்காவுக்கு வந்தால், லட்சத்தி ஐம்பதாயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னுர்கள். ஒரு நகம் போனதற்காக, ஒரு சங்கீத வித்வான் இருபத்தையாயிரம் ரூபாய் வாங்கி கொண்டதாக, நேற்றுப் பத்திரிகைகளில் போட்டிருக்கிறதே, பார்க்கவில்லையா!

பாவெல்: பத்திரிகையில் எதை வேண்டுமானுலும் போட்டுவிடுவார்கள். ஆனுல், அது சாத்தியமா?

நினு: (திடமான தொனியில்) நான் சொல்லுகிறேன், கேள்; அது நிஜம்.

பாவெல்: ஒரே ஒரு நகத்துக்காக, அவனுக்கு ஏன் பணம் கொடுத்தார்கள்?

நடாஷா: ஆமாம், ஏன் கொடுத்தார்கள்?

நினு: ஏனென்ருல், அவன் ஒரு பியானே வித்வான். தனது கைக்கு ஏதாவது கெடுதல் நேரிட்டால், அவனுல் வாசிக்க முடியாதல்லவா? அதற்காகக் கையை இன்ஷியூர் செய்திருந்தான். அந்தப் பணம் கிடைத்தது.

பாவெல்: என்ன வியாபாரம் இது!

*ஹைஸ்கூலில் ஆறவது பாரம் படிக்கும் ஒரு மாணவனை* ஸெனேச்கா *பிரவேசிக்கிறன்.*

**ஸெனெச்கா:** *இங்கென்ன மகாநாடு கூடியிருக்கிறீர்கள்? இதெல்லாம் என்ன?*

*நினு தங்கள் சம்பாஷணையை அவனுக்குச் சொல்லுகிறள்.*

**ஸெனெச்கா:** (*அவளினும் அதிக திடமான தொனியில்*) *அதைவிட மேலான மற்றொரு சம்பவம் எனக்குத் தெரியுமே! பாரிஸில் ஒரு நாட்டியக்காரி, தன் கால்களுக்கு ஏதாவது தீங்கு நேரிட்டு வேலை செய்ய முடியாமற் போகுமானல், அதற்குப் பாதுகாப்பாக இரண்டு லட்சம் ரூபாய்க்கு இன்ஷியூர் செய்திருக்கிருள்.*

**வேலையாள்:** *நான் ஒன்று சொல்லுகிறேன், மன்னியுங்கள். அவர்கள் கஷ்டப்படாமல் வேலை செய்பவர்கள்.*

**பாவெல்:** *அடடா! என்ன வேலை! அதற்குப் பணமுங் கொடுக்கிருர்களே, அழகுதான்!*

**ஸெனெச்கா:** *ஆனல், அந்த வேலையை எல்லோரும் செய்ய முடியாது, இதை ஞாபகத்தில் வை. அதைக் கற்றுக்கொள்ள, அவர்களுக்கு எவ்வளவு வருஷம் ஆகிறது தெரியுமா?*

**பாவெல்:** *எதைக் கற்றுக்கொள்ள? ஏதாவது நல்ல காரியத்தை அல்லவா கற்க வேண்டும்? காலை எப்படி முறுக்குவது என்று கற்பது!*

**ஸெனெச்கா:** *ஓ! உனக்கொன்றும் தெரியாது. கலை என்பது ரொம்பப் பெரிய விஷயம்.*

பாவெல்: சரிதான்; இதெல்லாம் வெறும் குப்பை என்று நான் நினைக்கிறேன். பணங் கொழுத்த ஜனங்கள், பைத்தியக்காரத் தனமாய் இப்படி அதை வாரி இறைக்கிறார்கள். அவர்களும் நம்மைப்போல் முதுகை வளைத்து வேலை செய்து தங்கள் பணத்தைச் சம்பாதித்திருந்தால், இந்த நாட்டியக்காரிகளும் பாடகிகளும் யாருமிருக்க மாட்டார்கள். இந்த அத்தனை பேரும் ஒரு தம்பிடி கூடப் பெறமாட்டார்கள்.

ஸெனெச்கா: படிப்பில்லாதவன் என்பதைக் காட்டிவிட்டானே! பீதோவன், வையார்டோ, ராபேல் அத்தனை பேரும் வெறும் குப்பையாமே!

நடாஷா: அவன் சொல்லுவது நிஜம் என்றே நான் நினைக்கிறேன்.

நி: சரி; போவோம், வாருங்கள்!

## 15. *சயின்ஸ்*

ஒரு மாணுக்கன் : 15 *வயது (புதுமைப் பித்தன்)*
ஒரு மாணுக்கன் : 16 *வயது (பழமைப் பக்தன்)*
வலோத்யா :
பெட்ருஷ்கா : } 8 *வயதுள்ள இரட்டைக் குழந்தைகள்.*

புதுமைப் பித்தன் : *லத்தீனும் கிரேக்கும் எனக்கென்ன பிரயோசனம்? அவற்றிலே பிரயோசனமாயிருக்கக் கூடிய சகல விஷயமுந்தான் நம் தாய்ப் பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு விட்டனவே.*

பழமைப்பக்தன் : *கிரேக்க பாஷையை நீ படிக்காவிட்டால், 'இலியட்'டை நீ புரிந்து கொள்ள முடியாது.*

பு-பித்தன் : *அந்தக் காவியத்தைப் படிக்க வேண்டிய தேவையே எனக்குக் கிடையாது. அதைப் படிக்க எனக்கு ஆசையுமில்லை.*

வலோத்யா : *'இலியட்' என்றால் என்ன?*

பு-பித்தன் : *ஒரு கதை.*

ப-பக்தன் : ஆமாம். ஆனால், அதுமாதிரி இன்னொரு கதை உலகத்திலேயே கிடையாது.

பெட்ருஷ்கா : அப்படி என்ன அதற்கு உயர்வு வந்தது?

பு-பித்தன் : ஒன்றும் இல்லை. மற்றக் கதைகள் மாதிரிதான் அதுவும் ஒரு கதை.

ப-பக்தன் : அந்தக் கதைகளை நீ அறிந்து கொள்ளா விட்டால், பழமையை நீ ஒரு நாளும் நன்றாய்ப் புரிந்து கொள்ள முடியாது.

பு-பித்தன் : இது ஒரு மூட நம்பிக்கை என்றே என் அபிப்பிராயம்; மத சித்தாந்தங்கள் என்ற மூட நம்பிக்கைகள் இல்லையா, அந்த மாதிரி தான் இதுவும்.

ப-பக்தன் : (ஆத்திரமுற்று) மத சித்தாந்தங்கள் அர்த்த மற்ற வெறும் மூட நம்பிக்கைகள் தான். ஆனால், இதுவோ உலக சரித்திரமும் ஞானமு மாகும்.

வலோத்யா : மத சித்தாந்தங்கள் உண்மை யிலேயே அபத்தமானவையா?

ப-பக்தன் : நீ எதற்காகக் குறுக்கே வந்து விழு கிறாய்? இதை யெல்லாம் பற்றி உங்களுக் கொன் றும் தெரியாது.

வலோத்யா, பெட்ருஷ்கா : (இருவரும் வருத்தமுற்று) எங்க ளுக்கு ஏன் தெரியாது?

வலோத்யா : ஒருவேளை உங்களுக்குப் புரிந்ததை விட அதிக நன்றாய் எங்களுக்குப் புரிந்திருக்கலாம்.

ப-பக்தன் : ஓ! பேஷ்! அப்படியா!! ஆனால், பேசாமல் வாயைமூடிக்கொண்டு உட்கார்ந்திருங்கள்; எங்கள் சம்பாஷணையிலே குறுக்கிடாதேயுங்கள். (புதுமைப் பித்தனைப் பார்த்து) புராதன பாஷைகள், நவீன வாழ்க்கைக்கு உபயோகப்பட மாட்டா என்று சொல்லுகிறாய்? அப்படியானால், சிற்றுயிர் ஆராய்ச்சி, ராசாயனம், பௌதிகம், வான சாஸ்திரம் ஆகியவை பற்றியும் நீ சொல்லுகிறபடியே சொல்லி விடலாம் அல்லவா? நட்சத்திரங்களின் தூரங்களையும், பரிமாணங்களையும், யாருக்கும் பயனற்ற இவை போன்ற பிற விவரங்களையும் அறிவதால் என்ன பிரயோசனம்?

பு-பித்தன் : இந்த விஷயங்களெல்லாம் பயனில்லை என்று ஏன் சொல்லுகிறாய்? இவைகள் மிக உபயோக மாயிற்றே.

ப-பக்தன் : எதற்கு உபயோகம்?

பு-பித்தன் : எதற்கா? சகலத்துக்குந்தான் ....உதாரணமாக, கப்பல் ஓட்டுவதற்கு இவைகள் உதவும்.

ப-பக்தன் : அதற்கு வானசாஸ்திரம் தேவையில்லை.

பு-பித்தன் : சரிதான். விவசாயம், வைத்தியம், கைத்தொழில் இவைகளுக் கெல்லாம் விஞ்ஞான சாஸ்திரம் பிரயோக மாகிறதே, அதற்கென்ன சொல்லுகிறாய்?

ப-பக்தன் : அதே விஞ்ஞான சாஸ்திரம், குண்டுகள் செய்யவும் யுத்தங்களிலும் புரட்சிக்காரர்

களாலும் உபயோகிக்கப் படுகிறதே! ஜனங்கள் சிறப்பாய் வாழ விஞ்ஞான சாஸ்திரம் உதவு மானுல்....

புபித்தன்: உன் சாஸ்திரமிருக்கிறதே, அதைக் கொண்டு ஜனங்கள் சிறப்பாய் வாழ முடியுமா?

வலோத்யா: எந்த விதமான சாஸ்திரம் ஜனங் களைச் சிறப்படையச் செய்கிறது?

ப-பக்தன்: மூத்தவர்கள் பேசும்போது நீ குறுக்கிடாதே என்று உனக்குச் சொன்னே னல்லவா? ஏன் உளறிக்கொண்டே யிருக்கிருய்?

வலோத்யா, பெட்ருஷ்கா: (இருவரும் சேர்ந்து) உளற லோ, என்னவோ; ஆனுல், எந்த விதமான சாஸ்தி ரம் ஜனங்களைச் சிறப்படையச் செய்கிறது என்று சொல்லேன், பார்ப்போம்.

புபித்தன்: அந்த மாதிரி ஒரு சாஸ்திரமும் கிடை யாது. ஒவ்வொருவனும் தான் தானே அப்படி வாழ வேண்டும்.

ப-பக்தன்: அவர்களோடு ஏன் பேசுகிருய்? அவர்களுக்கு ஒன்றுமே புரியாது.

பு-பித்தன்: ஏன் புரியாது? (வலோத்யா, பெட் ருஷ்கா இருவரையும் நோக்கி) எப்படி வாழ்வது என்று பள்ளிக்கூடத்திலே சொல்லித்தர மாட்டார்கள்.

வலோத்யா: அதைச் சொல்லித் தராவிட்டால், அந்தப் பள்ளிக்கூடங்களில் படிக்கவேண்டிய தேவையே இல்லை.

**பெட்ருஷ்கா:** *நாங்கள் பெரியவர்களாகும்போது அநாவசியமான விஷயங்களைக் கற்கவேமாட்டோம்.*

**வலோத்யா:** *ஆனல், நாங்களாகவே சிறப்பாய் வாழ்வோம்.*

**ப-பக்தன்:** *(நகைப்புடன்) சகலத்தையும் இந்த ரிஷீசுவரர்கள் எப்படிச் சுருக்கிக் கூறிவிட்டார்கள். பார்த்தாயா!*

# 16. வழக்காடுதல்

விவசாயி.

அவன் மனைவி.

பாதிரி.

பேடார். } விவசாயியின் பிள்ளைகள்.
பேட்கா. }

**விவசாயி:** [குடிசைக்குள் நுழைந்து மூட்டை முடிச்சுகளைக் கீழே வைத்துக்கொண்டு] அப்பாடா! என்ன வெயில்! நான் அங்கே போவதற்குள் பிராணன் போய் விட்டது.

**மனைவி:** ஆமாம்; அது ரொம்பத் தூரமல்லவா! பதினைந்து மைல்கள் இருக்குமே!

**விவசாயி:** பதினைந்தாய்ப் போவானேன்; இருபது மைல். (பேடாரை நோக்கி) போ; குதிரையை அவிழ்த்து லாயத்தில் கட்டு.

**மனைவி:** சரி; தீர்ப்பு நமக்குச் சாதகந்தானே?

**பாதிரி:** என்ன விஷயம்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!

விவசாயி: சொல்லுகிறேன்; இதுதான் சமாசாரம். என் வீட்டுக் கொல்லையை அவெர்யான் அபகரித்துக் கட்டிக்கொண்டான். தன்னுடையது என்கிறான். என்றால் இந்த விவகாரத்தைத் தீர்த்துக்கொள்ள முடியவில்லை.

மனைவி: இதற்காக இரண்டு வருஷமாய்க் கோர்ட்டில் வழக்காடி வருகிறோம்.

பாதிரி: அது எனக்குத் தெரியும். போன ஈஸ்டருக்கு முன் உள்ளூர்க் கோர்ட்டில் கூட விசாரணை நடந்ததே. அப்போது உனக்குச் சாதகமாய்த் தீர்ப்பு ஆனதாக அல்லவா கேள்விப்பட்டேன்?

விவசாயி: ஆமாம்; அப்படித்தான் தீர்ப்பு ஆயிற்று. ஆனால், நிலகாப்டன் என்ற அதிகாரிக்கு அவெர்யான் மனுப் பண்ணிக்கொண்டான். அவர் புனர் விசாரணைக்கு உத்திரவு போட்டுவிட்டார். ஆகையால், நான் ஜட்ஜிகளிடம் போனேன். அவர்களும் எனக்குச் சாதகமாகவே தீர்ப்புச் செய்தார்கள்; அதோடு விவகாரம் தீர்ந்திருக்கவேண்டும். ஆனால், இப்போது புனராலோசனை செய்து, கொல்லையை அவெர்யானுக்குக் கொடுத்து விட்டார்கள். என்ன அற்புதமான ஜட்ஜிகள், பாருங்கள்!

மனைவி: அப்படியானால், இனி என்ன செய்வது?

விவசாயி: என் சொத்தை அவன் அபகரித்துக் கொள்ள, நான் விடப் போவதில்லை. மேல்

கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப் போகிறேன். அதற்காக ஒரு வக்கீலையும் அமர்த்தி வந்திருக்கிறேன்.

**பாதிரி:** சரிதான். ஆனால், மேல் கோர்ட்டும் அவனுக்குச் சாதகமாய் முடிவு செய்து விட்டால்?

**விவசாயி:** அதற்கும் உயர்ந்த கோர்ட்டுக்குப் போவேன். என்னிடம் உள்ள பசுமாடு கூட மிஞ்சாமல் சகலத்தையும் விற்கவேண்டி வந்தாலும் சரி, அந்தப் பருத்த தொந்திப் பிசாசிடம் என் சொத்தை நான் விடப்போவதில்லை. தான் யாரிடம் சீண்டுகிறான் என்று உணரும்படி அவனுக்குப் பாடம் கற்பிக்கிறேன்.

**பாதிரி:** இந்த ஜட்ஜிகள் தான் என்ன பீடைகளா யிருக்கிறார்கள்—நிஜமாகவே பீடைகள் தான்! ஆனால், அவர்களும் அவனுக்குச் சாதகமாய்த் தீர்ப்புச் செய்து விட்டால்?

**விவசாயி:** ஜாரிடம் செல்கிறேன்....குதிரைக்குப் புல் போட வேண்டும்; நான் போகிறேன். [வெளியே செல்கிறான்]

**பேட்கா:** ஜாரும் நமக்கு விரோதமாய் முடிவு செய்து விட்டால், அப்புறம் யாரிடம் செல்வது?

**தாய்:** ஜாருக்கு மேல் ஒருவரும் கிடையாது.

**பேட்கா:** ஜட்ஜிகளில் சில பேர் அவெர்யான் பக்கமும் மற்றவர் அப்பா பக்கமும் தீர்ப்புச் செய்கிறார்களே! அது ஏன்?

**தாய்:** அவர்களுக்கே என்ன செய்வதென்று தெரிய வில்லை போலிருக்கிறது.

பேட்கா: அப்படியானுல், அவர்களுக்குத் தெரி யாத விஷயத்தை அவர்களிடம் நாம் ஏன் போய்க் கேட்க வேண்டும்?

தாய்: ஏனென்ருல், ஒருவரும் தனக்குச் சொந்தமான பொருளைப் பிறருக்கு விட்டுக் கொடுக்க இஷ்டப் படுவதில்லை.

பேட்கா: நான் வளர்ந்து பெரியவனுகும் போது, என்ன செய்யப் போகிறேன் தெரியுமா? யாரிட மாவது ஏதாவது எனக்கு விவகாரம் வந்தால், திரு வுளச் சீட்டுப் போட்டுப் பார்ப்பேன். அகுல்கா வோடு வேற்றுமை வந்தால், நான் எப்போதும் இப்படித்தான் செய்து வருகிறேன்.

பாதிரி: வாஸ்தவம்; அது தான் மிகச் சிறந்த வழியென்று தோன்றுகிறது! அப்படி முடிவு செய்வதிலே பாவமே வராது.

தாய்: ஆமாம். அந்தத் துண்டு நிலத்துக்காக என்ன செலவு செய்து விட்டோம்....அதன் விலைக்குமேல் போய் விட்டது! ஆமாம், அது பாவந்தான்...பாவம்!

# 17. குற்றச் சட்டம்

கிரிஷ்கா : வயது 12.

ஸெம்கா : வயது 10.

திஷ்கா : வயது 13.

திஷ்கா: பிறத்தியாருடைய செல்குதிரில் இனி அவன் திருட்டுத்தனமாய் நுழையாதபடி, அவனை ஜெயிலில் போட்டு விடுவார்கள். இன்னொரு தடவை திருட, அவன் பயப்படுவான்.

ஸெம்கா: அவன் நிஜமாகவே திருடி யிருந்தால் இது சரி. ஆனால், மிட்ரோபானை, தப்பிதமாய் ஜெயிலுக்கு அனுப்பி விட்டார்கள் என்று தாத்தா மிகிடா சொல்லுகிறாரே!

திஷ்கா: என்ன சொல்லுகிறாய்? தப்பித மாகவா? அவனைத் தப்பிதமாய்த் தண்டித்த மனிதருக்குத் தண்டனை கிடைக்காதா?

கிரிஷ்கா: அவர் தப்பிதமாய்த் தண்டித்திருந் தால், அவரைச் சொப்பை தட்டிக் கொடுக்கமாட் டார்கள். அவருக்கும் தண்டனை கிடைக்கும்.

ஸெம்கா: யார் அவரைத் தண்டிப்பார்கள்?

திஷ்கா: அவருக்கு மேலே உள்ளவர்கள்.

ஸெம்கா: அவருக்கு மேலே யார் இருக்கிறார்கள்?

திஷ்கா: மேலதிகாரிகள்.

ஸெம்கா: அந்த மேலதிகாரிகளும் தப்பிதம் செய்து விட்டால் — ?

கிரிஷ்கா: இன்னும் மேலே உள்ள அதிகாரிகள், அவர்களைத் தண்டிப்பார்கள். அதற்காகத்தான் ஜார் மன்னர் இருக்கிறார்.

ஸெம்கா: ஜார் மன்னர் தப்பிதம் செய்தால், அவரை யார் தண்டிப்பார்கள்?

திஷ்கா: 'யார் தண்டிப்பார்கள்? யார் தண்டிப்பார்கள்?' நமக்குத் தெரியும்........

கிரிஷ்கா: அவரைக் கடவுள் தண்டிப்பார்.

ஸெம்கா: அப்படியானல், நெல்குதிரில் தொற்றிய மனிதனையும்தான் கடவுள் தண்டிப்பாரே? ஆகையால், கடவுள் ஒருவரே, குற்றவாளியைத் தண்டிக்க வேண்டும். கடவுள் தப்பிதமே செய்ய மாட்டார்.

திஷ்கா: ஆனல், நீ பார், அந்த மாதிரி நடக்க முடியாது!

ஸெம்கா: ஏன் முடியாது?

திஷ்கா: ஏனென்றால்........

# 18. சொத்துரிமை

*ஒரு கிழத் தச்சன்.*
*ஒரு சிறுவன் : 7 - வயது*

*மச்சின் சாளரக் கம்பிகளைக் கிழத் தச்சன் பழுது பார்த்துக் கொண்டிருக்கிறான். வீட்டு எஜமானின் மகன், அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறான்.*

**சிறுவன் :** எவ்வளவு நன்றாய்ச் செய்கிறாய்? உன் பெயரென்ன?

**தச்சன் :** அதுவா? முன்னே க்ரோல்கா என்று என்னை ஜனங்கள் கூப்பிடுவது வழக்கம்; இப் போதோ க்ரோல் என்று கூப்பிடுகிறார்கள். ஸாவிச் என்பது என்னுடைய இன்னொரு பெய ராகும்.

**சிறுவன் :** க்ரோல்கா ஸாவிச்! நீ எவ்வளவு நன் றாய் வேலை செய்கிறாய்?

**தச்சன் :** நன்றாய் வேலை செய்வதுதான் நல்லது. கோணல் வேலையால் என்ன பிரயோசனம்?

**சிறுவன் :** உங்கள் வீட்டிலே மச்சு இருக் கிறதோ?

தச்சன்: (நகைத்துக் கொண்டே) மச்சா! பையா உங்கள் வீட்டு மச்சு, அதோடு போட்டி போட முடியாதப்பா! ஜன்னலும் கிடையாது, கதவும் கிடையாது; கூரையும் கிடையாது, தரையும் கிடையாது — அப்பேர்ப்பட்டது எங்கள் வீட்டு மச்சு.

சிறுவன்: நீ எப்போது பார்த்தாலும் தமாஷ் செய்து கொண்டேயிருக்கிறாயே. இல்லை; நிஜமாகவே கேட்கிறேன். இந்த மாதிரி மச்சு உனக்கு இருக்கிறதா? எனக்குத் தெரிந்து கொள்ள ஆசையாயிருக்கிறது.

தச்சன்: மச்சா? அட ராஜா! எப்படியப்பா எங்கள் மாதிரி ஜனங்களுக்கு மச்சு இருக்க முடியும்? எங்கள் வீட்டுத் தலைமேலே ஒரு கூரையிருந்தால், அதுவே பெரிய மச்சுக்குச் சமானமாயிற்றே! வசந்த காலத்திலிருந்து, எனக்கு ஒரு குடிசை கட்டிக் கொள்ள நானும் தான் முயற்சி செய்தவண்ணமிருக்கிறேன். பழைய குடிசையை இடித்துத் தள்ளி விட்டேன்; ஆனால், புதிய குடிசையைக் கட்டி முடிக்க முடியவில்லை. அதற்கு ஒரு கூரையில்லை; அது இடிந்து விழுந்து கொண்டிருக்கிறது.

சிறுவன்: (ஆச்சரியத்துடன்) ஏன் அப்படி?

தச்சன்: ஏனென்றால், எனக்குப் போதிய பலமில்லை.

சிறுவன்: நீ என்ன சொல்லுகிறாய் — போதிய பலமில்லையா? நீ எங்களுக்கு வேலை செய்கிறாயே; இல்லையா?

தச்சன்: ஆமாம், நான் உங்களுக்கு வேலை செய்கிறேன்; ஆனால், எனக்கு நானே வேலை செய்து கொள்ள முடியாது.

சிறுவன்: ஏன் முடியாது? எனக்குப் புரியவில்லையே. விளங்கச் சொல்லேன்.

தச்சன்: நீ பெரியவனாய் வளரும் போது புரிந்து கொள்வாய், ராஜா. உங்களுக்கு நான் வேலை செய்ய முடியும்; ஆனால், எனக்கு நானே வேலை செய்து கொள்ள முடியாது.

சிறுவன்: அது ஏன் முடியாது?

தச்சன்: ஏனென்றால், என் வேலைக்கு எனக்கு மரம் வேண்டும்; என்னிடம் மரம் கிடையாது. ஆகையால், நான் மரத்தைக் கிரயத்துக்கு வாங்க வேண்டும்; ஆனால் அதற்கு என்னிடம் பணம் கிடையாது. நான் இப்போது உங்களுக்கு வேலை செய்து கொண்டிருக்கிறேன். உன் அம்மா எனக்குச் சம்பளம் கொடுப்பாள். கொஞ்சம் அதிகமாய் எனக்குச் சம்பளம் கொடுக்கும்படி நீ அவளிடம் சொல்லு. அவள் அப்படிக் கொடுத்தால், நான் காட்டுக்குப் போய், அரை டஜன் ஒதிய மரங்கள் வாங்கி உத்திரங்கள் செய்து என் கூரையைப் போட்டு விடுவேன்.

சிறுவன்: அப்படியானால் உனக்குச் சொந்தமாய்க் காடு கிடையாதா?

தச்சன்: காடுகள் ஏராளமாயிருக்கின்றன; மூன்று நாள் நடந்தாலும், மறுகோடி காண

முடியாத காடுகள்! அவை எங்களுக்குச் சொந்த மில்லை; அது தான் உபத்திரவம்!

சிறுவன்: ஆனால், எங்களுக்குச் சொந்தமான காடு தான் எங்களுக்குப் பெரிய தொல்லையா யிருக்கிறது என்று எங்கள் அம்மா சொல்லுகிறாளே! எங்கள் காட்டைப் பற்றியே அவள் எப்போதும் கவலைப்படுகிறாளே!

தச்சன்: ஆம், அதுதான் விநோதம். அவள் காடு ரொம்பப் பெரிசா யிருப்பதால், உங்கள் அம்மா தொல்லைப்படுகிறாள்; எனக்குக் காடே யில்லாததால், நான் தொல்லைப் படுகிறேன். சரி சரி. என் வேலையை மறந்து நான் உன்னோடு வம்பளந்து கொண்டிருக்கிறேன்; என் மாதிரி மனிதர்கள் வம்பளந்தால் யாரும் புகழ மாட்டார்கள். (*தன் வேலையில் மீண்டும் ஈடுபடுகிறான்.*)

சிறுவன்: நான் பெரியவனாய் வளரும் போது, ஒருவர் மாதிரியே மற்றவருக்கும் சொத்து இருக்கும் படி செய்யப் போகிறேன் — அப்போது எல்லாரும் எல்லாப் பண்டங்களையும் சமமாய்ப் பங்கிட்டுக் கொள்ளலாம்.

தச்சன்: அப்படியானால், நீ கொஞ்சம் வேகமாய் வளரப்பா; இல்லையானால், என்னால் காத்திருக்க முடியாது! ஆனால், இதை மாத்திரம் மறந்து போய் விடாதே.......அது இருக்கட்டும்; என் இழைப்புளியை எங்கே வைத்தேன்?

# 19. குழந்தைகள்

*ஒரு சீமாட்டியும் அவளுடைய குழந்தைகளும் தோட்டத்தில் உலாத்திக் கொண்டிருக்கிறார்கள். (பையன் ஹைஸ்கூல் மாணவன்: வயது 14. தனிச்கா என்ற மகளுக்கு வயது 5.) குடியானவக் கிழவி ஒருத்தி, அவர்களின் கிட்ட வருகிறாள்.*

சீமாட்டி: மாட்ரினு! என்ன விஷயம்?

கிழவி: அம்மா! நான் உன்னிடம்தான் வந்தேன்...........

சீமாட்டி: சரிதான். என்ன வேண்டும்?

கிழவி: தாயே! உன்னிடம் சொல்ல வெட்கமாயிருக்கிறது. இருந்தாலும் என்ன செய்வேன்? உன்னுடைய *ஞானப் பெண்ணுக்கு மற்றொரு குழந்தை பிறந்திருக்கிறது. அதற்கும் ஞானத் தாயாக இருக்கும்படி உன்னை வேண்டிக்கொள்ளவே, என்னை அவள் உன்னிடம் அனுப்பினுள்.

---

* கிறிஸ்தவக் குழந்தைகளுக்கு நாமகரணத்தோடு ஞானஸ்நானம் என்ற ஒரு ஸம்ஸ்காரம் நடப்பது வழக்கம். அப்போது ஞானத் தாய் - தந்தையர்களாக இருவரை வரிப்பார்கள். கிழவியின் 'பெண்ணுக்கு' அப்படி ஞானத் தாயாக இந்தச் சீமாட்டி இருந்திருக்கிறாள்.

சீமாட்டி: அப்படியா? ஸமீபத்தில் தானே முந்திய குழந்தை அவளுக்குப் பிறந்தது?

கிழவி: ஆமாம். கோடையிலிருந்து ஒரு வருஷமாகிறது அது பிறந்து.

சீமாட்டி: உனக்கு மொத்தம் எத்தனை பேரன் பேத்திகள் இருக்கிறார்கள்?

கிழவி: எண்ணிக்கையில் அடங்க மாட்டார்கள். அவர்களில் பாதிப் பேரை யாராவது தானம் வாங்கிக் கொண்டால் தேவலை. அத்தனையும் வாண்டுகள்—ஒன்றை விட ஒன்று சின்னது. துரதிர்ஷ்டம்!

சீமாட்டி: உன் பெண்ணுக்கு இப்போது எத்தனை குழந்தைகள் இருக்கின்றன?

கிழவி: இது ஏழாவது, தாயே! அத்தனையும் உயிரோ டிருக்கின்றன. கடவுள்தான் சிலதைக் கொண்டுபோகக் கூடாதா?

சீமாட்டி: என்ன சொல்லுகிறாய்? நீ இப்படிப் பேசலாமா?

கிழவி: ஆனால், என்ன செய்வது? நாங்களோ பரம தரித்திரம். பாவம் செய்து படுகுழியில் விழத் தயாரா யிருக்கிறோம். எங்களிடம் கருணை காட்டு, தாயே! குழந்தையின் ஞானத் தாயாக நீதான் இருக்கவேண்டும். இல்லையானால்,—கடவுள் சாட்சியாகச் சொல்லுகிறேன்—பாதிரிக்குக் கொடுக்க எங்களிடம் பணம் கிடையாது; உணவுக்குப் போதிய ரொட்டி கூட எங்களிடம் இல்லை. என் மருமகப் பிள்ளை, உத்தியோக விஷயமாய் வெளியே போயிருக்கிறார். பெண்களாகிய நாங்கள்தான் தனியே

வீட்டில் இருக்கிறோம். நானோ கிழவி. அவளோ குழந்தைக்காரியாக இருக்கிறாள்; அல்லது புதிதாய் ஒன்றைப் பெற்று விடுகிறாள். அவள் என்ன வேலை செய்ய முடியும்? நான்தான் சகல வேலையையும் செய்ய வேண்டியிருக்கிறது—என்னைச் சுற்றிலும் பசிபசி யென்று அத்தனை கும்பலும் கத்துகிறது.

சீமாட்டி: உண்மையாய் அவளுக்கு ஏழு குழந்தைகள் இருக்கின்றனவா?

கிழவி: சத்யமாய் ஏழு குழந்தைகள்! மூத்த குழந்தை இப்போதுதான் கொஞ்சம் உதவி செய்யத் தொடங்கியிருக்கிறது. மற்றவை யெல்லாம் ரொம்ப வாண்டுகள்.

சீமாட்டி: பின் ஏன் அவள் இத்தனை குழந்தைகளைப் பெற்றாள்?

கிழவி: வேறே என்ன செய்வதென்கிறீர்கள்? அவர் ஸமீபப் பட்டணத்தில் வசிக்கிறார். ரஜா நாளில் ஊருக்கு வருகிறார்..........இருவரும் சிறிசுகள். அவர் எங்கேயாவது தூர தேசத்துக்குப் போய்விடக் கூடாதா!

சீமாட்டி: வாஸ்தவம்! குழந்தை இல்லையே என்றோ, இறந்ததே என்றோ சிலர் அழுகிறார்கள். நீயோ இவ்வளவு குழந்தைகள் இருக்கின்றனவே என்று அழுகிறாய்!

கிழவி: எவ்வளவு, எவ்வளவு! எங்கள் சக்திக்கு மிஞ்சி விட்டன. அதிருக்கட்டும், தாயே! நீதான்

அவளுக்குக் கொஞ்சம் தைரியம் கொடுக்க வேண்டும்.

சீமாட்டி: நல்லது. மற்றக் குழந்தைகளுக்கு நானே ஞானத்தாயாய் இருந்தேன். இதற்கும் அப்படியே இருக்கிறேன். இது என்ன, பையனு?

கிழவி: பையன்தான். ரொம்பச் சிறிசு; ஆனல் ஆரோக்கியமா யிருக்கிறது. நன்ருய்க் கத்துகிறது. நீ வரும் நேரத்தைக் குறிப்பிடுவாயா?

சீமாட்டி: உன்னிஷ்டப்படி நீயே அதைக் குறித்துவிடு.

[கிழவி வந்தனம் செலுத்திவிட்டு அப்பால் செல்கிறள்.]

தனிச்கா: அம்மா! ஏன் சில ஜனங்களுக்கு மாத்திரம் குழந்தைகள் இருக்கின்றன; மற்றவர் களுக்கு இல்லை? உனக்கு இருக்கின்றன; மாட்ரிஸவுக்கு இருக்கின்றன. பராஷாவுக்கு இல்லையே!

சீமாட்டி: பராஷாவுக்குக் கலியாணம் ஆக வில்லை. கலியாணம் செய்து கொண்டால்தான் குழந்தைகள் பிறக்கும். கலியாணம் செய்து கொண்டு புருஷனும் மனைவியும் ஆகிறவர்களே குழந்தைகள் பெறுவார்கள்.

தனிச்கா: கலியாணம் செய்து கொள்ளும் எல் லாருக்கும் குழந்தைகள் பிறக்குமா?

சீமாட்டி: எல்லாருக்கும் பிறக்காது. குக் என் பவருக்கு மனைவி யிருக்கிருள். அது உனக்குத் தெரி யும். இருந்தாலும் அவர்களுக்குக் குழந்தை யில்லை.

தனிச்கா: வேண்டியவர்களுக்குக் குழந்தை பிறக்கும்படியும் வேண்டாதவர்களுக்குப் பிறக் காதபடியும் ஏற்பாடு செய்ய முடியாதா?

சிறுவன்: என்ன முட்டாள்தனமான கேள்வி யெல்லாம் கேட்கிறாய்?

தனிச்கா: முட்டாள்தனமே யில்லை. மாட்ரினு வின் மகள் குழந்தைகளை விரும்பவில்லை. அவளுக் குக் குழந்தை பிறக்காதபடி ஏற்பாடு செய்வது நல்ல தல்லவா? அப்படிச் செய்ய முடியாதா, அம்மா?

பையன்: போடீ அசடு! என்ன அபத்த மெல் லாம் பேசுகிறாய்! இவைகளைப்பற்றி உனக் கொன் றும் தெரியாது.

தனிச்கா: அந்த மாதிரி ஏற்பாடு செய்ய முடி யாதா, அம்மா?

சீமாட்டி: உனக்கு நான் எப்படிச் சொல்வது? நமக்கு அது தெரியா தம்மா....அதெல்லாம் கடவுள் சித்தம்.

தனிச்கா: ஆனல், குழந்தைகள் எப்படிப் பிறக் கின்றன?

பையன்: (நகைப்புடன்): அட அஜமே!

தனிச்கா: (வருத்தமுற்று) இதில் என்ன சிரிப்பு? குழந்தைகளால் கஷ்ட முண்டாகிற தென்று மாட் ரினு சொல்லுகிருள். அப்படியானல், குழந்தைகள் பிறக்காதபடி ஏற்பாடு செய்ய வேண்டியது தானே? தாதியம்மாளுக்குக் குழந்தைகள் இல்லை; எப் போதுமே இல்லை.

சீமாட்டி: ஆனல், அவளுக்குக் கல்யாணமே ஆகவில்லை. புருஷன் கிடையாது.

தனிச்கா: குழந்தைகள் வேண்டாம் என்பவர் எல்லாரும் அப்படியே இருக்கவேண்டும். இல்லா விட்டால், என்ன நேர்கிறது? குழந்தைகள் பிறந்து விடுகின்றன; அவைகளுக்கு உணவளிக்க வகையில்லை. (சீமாட்டி பையனை நோக்கிவிட்டு, மௌனமா யிருக்கிறள்.) நான் பெரியவளாய்ப் போனால், கட்டா யம் கலியாணம் செய்து கொள்ளுவேன்; ஆனால், ஒரே ஒரு பெண்ணும் ஒரே ஒரு பையனும் மாத்தி ரம் பெற்றுக் கொண்டு, பிறகு இல்லவே இல்லாத படி ஏற்பாடு செய்து கொள்ளுவேன். குழந்தை களைப் பெறுவது. பிறகு அவைகளை வெறுப்ப தென்றால், நியாயமல்ல. என் குழந்தைகளிடம் நான் எப்படி அன்பு காட்டுவேன், தெரியுமா! நிஜ மாய், அம்மா! நான் தாதியம்மாளைப் போய்க் கேட்கிறேன், பார். (போகிறள்.)

சீமாட்டி: (மகனைப் பார்த்து) ஆமாம், அதென்ன பழமொழி? 'குழந்தைகள் வாயிலிருந்து'....அப்புற மென்ன? 'உண்மை பிறக்கிறது.' அவள் சொன் னது முற்றிலும் உண்மை. கல்யாணமென்பது மிக முக்கியமான விஷயம், விளையாட்டல்ல என்று மட் டில் ஜனங்கள் தெரிந்து கொள்வார்களானல்—தங்கள் சுகத்துக்காக மணக்காமல் குழந்தைகளின் நன்மைக்காகவே அவர்கள் மணப்பார்களானல்—அநாதைகளாய், திக்கற்றுக் குழந்தைகள் தவிக் கும் கொடூரம் ஒழியும். மாட்ரினவின் பெண்ணுக் குக் குழந்தைகளால் உண்டாகும் துயரம் போன்ற துயரம் யாருக்கும் இராது; குழந்தைகளால் எவ ருக்கும் ஆனந்தமே உண்டாகும்.

# 20. படிப்பு

ஒரு காவல்காரன்.

நிக்கோலே: *ஹைஸ்கூல் மாணவன், வயது* 15

காட்யா: *7 வயதுச் சிறுமி.*

அவர்களின் தாய்.

*கதவுக் குமிழியைக் காவல்காரன் துடைத்துக் கொண்டிருக்கிறான். சின்னஞ் சிறு கற்களைக் கொண்டு, காட்யா ஒரு சிறு வீடு கட்டுகிருள். நிக்கோலே பிரவேசித்துப் புத்தகங்களை விட்டெறிகிருன்.*

நிக்கோலே: *அவர்கள் நாசமாய்ப் போக! அவர்களது ஹைஸ்கூல் இடிந்து விழ!*

காவல்காரன்: *என்னப்பா சமாசாரம்?*

நிக்கோலே: *மறுபடியும் எனக்குச் சுழித்து விட்டார்கள். அவர்கள் பாழாய்ப் போக! மறுபடியும் தகரார்தான். அவர்களுடைய பூகோளம் என்னை என்ன பாடு படுத்துகிறது! அந்தக் கிலிபோர்னியாவா மண்ணாங்கட்டியா, அது எங்கேயிருந்து தொலேந்தாலென்ன? எனக் கெதற்காகத் தெரிய வேண்டும்?*

காவல்காரன்: *இனி அவர்கள் உன்னை என்ன செய்வார்கள்?*

நிக்கொலே: *அதே வகுப்பில் என்னை மறுபடியும் நிறுத்தி விடுவார்கள்.*

காவல்காரன்: *நீ ஏன் உன் பாடங்களைப் படிப்பதில்லை?*

நிக்கொலே: *ஏனென்றால், உதவாக்கரைக் குப்பையையெல்லாம் என்னால் படிக்க முடியாது; அதனால்தான். அவர்களெல்லாரும் நாசமாய்ப் போக! (ஒரு நாற்காலியில் சாய்கிறான்.) அம்மாவிடம் போய், இனி என்னால் முடியாதென்று சொல்லுகிறேன்; இதோடு அதை ஒழிக்க வேண்டியதுதான். என்னை அவள் பள்ளிக்கூடத்தை விட்டு அகற்றா விட்டால், கடவுள் சாட்சியாய்ச் சொல்லுகிறேன்—நான் ஓடிவிடப் போகிறேன்!*

காவல்காரன்: *எங்கே ஓடுவாய்?*

நிக்கொலே: *வீட்டை விட்டு ஓடிவிடுவேன். ஒரு குதிரைக் காசாரி அல்லது காவல்காரனாக வேலை செய்கிறேன்! இந்தக் குப்பைப் படிப்பை விட, வேறே எதுவா யிருந்தாலும் மேல்தான்.*

காவல்காரன்: *ஆனால், காவல்காரனின் வேலை சுலபம் அல்ல, அப்பா! அதைத் தெரிந்து கொள். அதிகாலையிலே எழுந்திருக்க வேண்டும்; விறகு வெட்ட வேண்டும்; அதைச் சுமந்து கொண்டு போய்த் தீ மூட்ட வேண்டும்.*

நிக்கொலே: பூ! (சீட்டி யடித்துக் கொண்டே) அது பெரிய தமாஷா ஆயிற்றே! கட்டை உடைப்பதுசுக மான வேலை அல்லவா! இதைச் சொல்லி என்னை நீ மிரட்ட முடியாது. இது ரொம்பவும் சுகமான வேலை. நீ பூகோளம் கற்றுப் பார்த்தாயானால் தெரியும்.

காவல்காரன்: நிஜமாகவா? அப்படி யானால், உன்னை ஏன் அவர்கள் அதைப் படிக்கச் செய்கிறார்கள்?

நிக்கொலே: அதுதான் நானும் கேட்கிறேன். அதற்குக் காரணமே கிடையாது. அது ஒரு வழக்கம்; அவ்வளவுதான். பூகோளம் தெரியாமல் மனிதர்கள் வாழ முடியாது என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

காவல்காரன்: நீ கற்றுத்தான் ஆகவேண்டும்: இல்லையானால், நீ உத்தியோகத்தில் நுழைய முடியாது; உன் அப்பா, மாமன் இருவரையும் போலப் பதவியும் சம்பளமும் உனக்குக் கிடைக்கமாட்டா.

நிக்கொலே: அவை எனக்கு வேண்டா மென்றால் — ?

காட்யா: ஆமாம்; அவனுக்கு வேண்டா மென்றால் — ?

ஒரு நறுக்கை எடுத்துக் கொண்டு, தாய் பிரவேசிக்கிறாள்.

தாய்: நீ மறுபடியும் சுழி வாங்கிவிட்டாயாமே! இதோ ஹெட்மாஸ்டர் எழுதி யிருக்கிறார். இது

சரிப்படாது, நிக்கொலென்கா. இரண்டிலொன்று தான்: ஒன்று, நீ படிக்க வேண்டும்; அல்லது, படிப்பை நிறுத்த வேண்டும்.

நிக்கொலே: இரண்டிலொன்று தான். என்னல் முடியாது, முடியாது, முடியாது! சுவாமிக்குப் பொதுவாய்க் கேட்டுக் கொள்கிறேன்: பள்ளிக் கூடத்தை விட்டு என்னை நிறுத்தி விடு, அம்மா! என்னல் படிக்கவே முடியாது.

தாய்: ஏன் முடியாது?

நிக்கொலே: என்னல் முடிந்தால்தானே! அது என் தலையில் நுழைய வில்லை.

தாய்: நீ கவனித்துப் படிப்பதில்லை; அதனல் தான் அது உன் தலையில் நுழையவில்லை. உதவாக் கரைக் குப்பையை யெல்லாம் பற்றி யோசிப்பதை விடு; உன் பாடங்களில் கவனம் செலுத்து.

நிக்கொலே: கெஞ்சிக் கேட்கிறேன், அம்மா! என்னைப் பள்ளிக் கூடத்திலிருந்து நிறுத்திவிடு. எனக்கு வேறொன்றும் வேண்டாம். இந்தப் பயங் கரப் படிப்பிலிருந்து—இந்தத் தொழும்பி லிருந்து —என்னை விடுதலை செய். இது என்னல் தாள வில்லை.

தாய்: படிப்பை விட்டு என்ன செய்யப் போகி ருய்?

நிக்கொலே: அது என்னைப் பொறுத்த விஷயம்.

தாய்: இல்லை, அது உன்னைப் பொறுத்த தல்ல; என் பொறுப்பேயாகும். உனக்கு நான்

செய்ய வேண்டிய கடமைபற்றி, நான் அல்லவா கடவுளுக்குப் பதில் சொல்ல வேண்டும்? உன்னைப் படிக்க வைக்க வேண்டியது என் கடமையாகும்.

நிக்கொலே: நான் படிக்கா விட்டால்—?

தாய்: (கோபமாக) என்ன பிதற்றுகிறாய்! நான் உன் தாயார் என்ற முறையில் கடைசித் தடவையாக வேண்டிக் கொள்ளுகிறேன்: குணந் திருந்தி, சொன்னதைச் செய். நான் கூறுவதை நீ கேட்கா விட்டால், வேறு முறைகளை நான் கையாள நேரும்.

நிக்கொலே: என்னால் படிக்க முடியாது, படிக்க மாட்டேன் என்றுதான் நான் உன்னிடம் சொல்லி விட்டேனே?

தாய்: உஷார், நிக்கொலே!

நிக்கொலே: எதற்கு உஷார்ப் படவேண்டும்? ஏன் என்னை நீ இம்சிக்கிறாய்? ஏன் இப்படிப் புரியாமல் பேசுகிறாய்?

தாய்: இந்த மாதிரி பேச உனக்கு என்ன துணிச்சல்! என்ன துணிச்சலடா! உடனே இந்த அறையை விட்டுத் தொலை! உஷார்!

நிக்கொலே: ரொம்ப நல்லது; நான் போகிறேன். எனக்கு எதற்கும் பயமில்லை; உன்னிடம் நான் எதையும் எதிர்பார்க்க வில்லை. [வெளியே ஓடி, கதவைப் படீர் என்று சாத்திக் கொள்கிறன்.]

தாய்: [தனக்குத்தானே] என்ன தொல்லை செய்து, என் உயிரை வாங்குகிறான்! இதற்கெல்

லாம் காரணம் எனக்குத் தெரியும். அவசியமான விஷயங்களில் அவன் கவனம் செலுத்துவதில்லை; குப்பை கூளங்களை யெல்லாம் யோசிக்கிறான்— நாய்கள், கோழிகளைப் பற்றி யெல்லாம் யோசனை!

காட்யா: ஆனால், அம்மா! மூலையிலே நின்று கொண்டால், குருட்டு யோசனை யெல்லாம் வரத் தான் வரும்; அதைத் தடுக்க முடியாது என்று நீயே சொல்லி யிருக்கிறாயே?

தாய்: அதைப்பற்றி நான் இப்போது பேச வில்லை. தனக்குச் சொன்ன பாடத்தை அவன் படிக்க வேண்டும் என்றே சொல்லுகிறேன்.

காட்யா: அவன்தான் தன்னால் முடியவில்லை என்கிறானே?

தாய்: அது வெறும் பிதற்றல்!

காட்யா: ஆனால், தான் ஒன்றுமே செய்யாம லிருக்க விருப்பமென்று அவன் சொல்ல வில்லை. பூகோளம் மட்டில்தான் தனக்குப் பிடிக்கவில்லை என்கிறான். வேலை செய்ய, அவனுக்கு விருப்பம் தான். குதிரைக் காசாரியாகவோ, காவல்கார னாகவோ வேலை பார்க்க, அவன் விரும்புகிறான்.

தாய்: அவன் ஒரு காவல்காரனின் மகனா யிருந்தால், தானும் ஒரு காவல்கார னாகலாம். உன் அப்பாவின் மகன் அல்லவா அவன்? ஆகையால், படித்தாக வேண்டும்.

காட்யா: ஆனால், அவனுக்கு இஷ்ட மில்லையே!

தாய்: அவனுக்கு இஷ்டமோ, இல்லையோ; எப்படியிருந்தாலும், அவன் படித்துத்தான் தீர வேண்டும்.

காட்யா: அவனால் முடியா விட்டால்—?

தாய்: இந்தா, நீயும் அவன் மாதிரி ஆகி விடாதே.

காட்யா: அவன் மாதிரியேதான் நானும் செய்யப் போகிறேன். எனக்குப் பிடிக்காத பாடத்தை எக்காரணத்தைக் கொண்டும் நான் படிக்கப் போவதில்லை.

தாய்: அப்படியானால், நீ ஒன்றும் தெரியாத ஒரு மூடமாகி விடுவாய். (மௌனம்)

காட்யா: நான் பெரியவளாய்ப் போய், குழந்தைகள் பெறுவேனானால், எக்காரணத்தைக் கொண்டும் நிர்பந்தப்படுத்தி அவர்களைப் படிக்கச் செய்ய மாட்டேன். அவர்களுக்கு இஷ்டமானால் படிக்க விடுவேன்; இஷ்டமில்லாவிட்டால், படிக்கச் செய்ய மாட்டேன்.

தாய்: நீ வளர்ந்து பெரியவளானால், அப்படியொன்றும் நடக்கமாட்டாய்.

காட்யா: நிச்சயம் அப்படித்தான் நடப்பேன்.

தாய்: கண்டிப்பாய் அப்படி நடக்கமாட்டாய்.

காட்யா: அப்படித்தான் நடப்பேன், நடப்பேன், நடப்பேன்!

தாய்: அவ்விதமானால், நீ ஒரு மூடமாவாய்.

காட்யா: மூடர்கள்தானே கடவுளுக்குத் தேவையாம், தாதி சொல்லுகிறாளே!

# சுந்தரி வ. ரா.

கலையும், கற்பனையும் கலந்து சமூகச் சீர் திருத்தத்துக்கு வழி காட்டும் அற்புதத்தை இந்நூலில் காணலாம்.

ரூபாய் ஐந்து

★

# அறநூல்கள் ராஜாஜி

உபநிஷதப் பலகணி வழியாகக் கண்ணன் காட்டிய வழியைக் கண்டு ஆத்மசிந்தனையைத் தூண்டுகிறார்.

ரூபாய் ஐந்து

★

# குற்றவாளி யார் ?

சம்பூரத்ன தூபே, தற்காலத்தில் பெண்களுக்கு அளிக்கப்படும் உயர்தரக் கல்வியினால் ஏற்படும் விபரீதங்களை நன்றாக எடுத்துக் காட்டுகிறார். ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டிய நூல்.

ரூபாய் மூன்று